விலை ரூபா 5.00 Registered as a News Paper in Sri Lanka பக்கம் எட்டு

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்

வலம்புரி
VALAMPURI

மங்கையர் மனம்
கொள்ளை கொள்ளும்
தங்க நகைகளுக்கு
சாரங்கா
நகைமாடம்
177/4கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P;- 2480

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 ஆவணி 10 திங்கட்கிழமை (26-8-2002) தொலைபேசி 3378 ஒலி 250

# கொள்ளையர் கோஷ்டி சூட்டில் இரண்டு பெண்கள் படுகாயம்

## ஆனைக்கோட்டையில் பயங்கரம்

(கொக்குவில்)

இயந்திரத் துப்பாக்கிகளுடன் வீட்டுனுள் புகுந்து கொள்ளையிட முற்பட்ட குழுவினர் தமது முயற்சி தோல்வியடைந்ததால் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இருபெண்கள் படுகாயமடைந்த நிலையில் யாழ்போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஆனைக்கோட்டை ஆறுகால்மடத்தடியில் நேற்று முன்தினமிரவு 10.15மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தினால் அதேஇடத்தைச் சேர்ந்த செல்லத்துரை இராஜேஸ்வரி (வயது39) செல்வரட்ணம் நகுலேஸ்வரி (வயது42) ஆகிய இருவருமே காயமடைந்தவர்களாவர்:

சம்பவம் பற்றித்தெரிய வருவதாவது

ஆறுகால்மடத்தடியில் செல்லர் சுந்தசாமி என்பவரின் வீட்டுக்குள் புகுந்த ஆறுபேர் கொண்ட துப்பாக்கி குழுவினர் வீட்டுக்குள் இருந்தவர்களை மிரட்டி

(8-ம் பக்கம் பார்க்க)

# தாய்லாந்துப் பேச்சில் சு. ப. தமிழ்ச்செல்வனும் கலந்து கொள்வார்

(லண்டன்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு. ப. தமிழ்ச்செல்வன் அடுத்தமாத முற்பகுதியில் ஐரோப்பாவுக்குச் செல்லவுள்ளார்.

தாய்லாந்தில் அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள அரசு புலிகளுக்கிடையிலான நேரடிப் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வதற்காகவே அவர் ஐரோப்பாவுக்குசெல்லவுள்ளார்.

ஐரோப்பிய நாடொன்றில் தங்கியிருந்துகொண்டு தமிழ்ச்செல்வன் தாய்லாந்துப்பேச்சு வார்த்தையில் கலந்துகொள்வார் என்ற தகவல் வெளியாகியுள்ளது.

இதேவேளை அடுத்த மாதம் 6-ம் திகதி புலிகள் மீதான தடையை அரசாங்கம் நீக்குவதையடுத்து, தமிழ்ச்செல்வன் வன்னியில் இருந்து கொழும்பு சென்று, கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையம் ஊடாகவே வெளிநாட்டுக்கு பயணம் செய்வார் என்றும் ஏஜென்சி ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

(இ)

# ஜனாதிபதியின் அதிகாரக் குறைப்பு சட்டமூலம் நிறைவேறினாலும் சர்வஜன வாக்கெடுப்பு அவசியம்

## பொ. ஐ. முன்னணியினர் கருத்து

(நமது நிருபர்)

**தன்னிச்சையான முறையில் பாராளுமன்றத்தைக் கலைக்கும் ஜனாதிபதியின் அதிகாரத்தைக் குறைக்கும் 18ஆவது அரசியல் அமைப்புத் திருத்தம் பாராளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றாலும், அதனை சர்வஜன வாக்கெடுப்பு மூலமே அங்கீகரிக்க வேண்டும் என்று பொதுஜன ஐக்கிய முன்னணித் தலைவர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்**

ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்தைக் குறைக்க ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் கொண்டு வரவுள்ள 18 ஆவது அரசியலமைப்பு திருத்தம் பாராளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெற்று நிறைவேறினாலும் சர்வஜன வாக்குரிமை மூலம் மக்களின் அங்கீகாரம் பெறப்படவேண்டுமென்று பொது ஜன ஐக்கிய

(8-ம் பக்கம் பார்க்க)

# புலிகள் மீதான தடை செ.6 இல் நீக்கப்படும்

## அரசு உத்தியோகபூர்வ அறிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் மீது விதிக்கப்பட்டுள்ள தடை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 6 ந் திகதி நீக்கப்படுமென அரசாங்கம் உத்தியோக பூர்வமாக நேற்று அறிவித்துள்ளது.

புலிகள் மீதான தடைநீக்கப்படுவதால் அவர்கள் சட்டபூர்வமான ஒரு அமைப்பாக மாறுகிறார்கள் அரசாங்கத்துடன் சமஅந்தஸ்தில் இருந்து பேச்சுவார்த்தை நடத்த முடியும். தடைநீக்கப்படுவதனால விடுதலைப் புலிகள சுதந்திரமாகவும், நம்பிக்கையுடனும்

(8ஆம் பக்கம் பார்க்க)

ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்தைக் குறைக்க ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் கொண்டு வரவுள்ள 18 ஆவது அரசியலமைப்பு திருத்தம் பாராளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெற்று நிறைவேறினாலும் சர்வஜன வாக்குரிமை மூலம் மக்களின் அங்கீகாரம் பெறப்படவேண்டுமென்று பொது ஜன ஐக்கிய

(8-ம் பக்கம் பார்க்க)

யோக பூர்வமாக நேற்று அறிவித்துள்ளது.

புலிகள் மீதான தடைநீக்கப்படுவதனால் விடுதலைப் புலிகள் சுதந்திரமாகவும், நம்பிக்கையுடனும்

(8ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான செயலகக்குழு இன்று வன்னி பயணம்

(கொழும்பு)

சமாதான செயலகப்பணிப்பாளர் பேணாட் குணதிலக தலைமையிலான குழு இன்று வன்னிக்குச் சென்றுவிடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேசவுள்ளது.

இச்சந்திப்பில் இருதரப்பு கைதிகளின் விடுதலைமற்றும் வடபகுதி புனரமைப்பு என்பன தொடர்பாக ஆராயப்படவுள்ளது.

இக்குழுவில் உள்நாட்டு வெளிநாட்டு வங்கியியல் நிபுணர்களும் செல்லவுள்ளனர்.

(த)

# முஸ்லிம்களின் உரிமைக்கு அநீதி ஏற்படக்கூடாது

## பேரியல் அஷ்ரப் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெறவுள்ள சமாதானப் பேச்சுவார்த்தையில், முஸ்லிம் மக்களின் உரிமைகளுக்கு அநீதி ஏற்படக் கூடாது.

தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவி பேரியல் அஸ்ரப் இவ்வாறு அரசாங்கத்

(8-ம் பக்கம் பார்க்க)


கையில் இருக்கும் நகைகளுக்கு

**கச்சிதமான கைமாற்று**

**ஹற்றன் நஷனல்**

**அடகு வைக்கும் வசதி**

ஒரு பவுணுக்கு ரூ. 5500/- அடகுப்பணம்!
மாதாந்த வட்டி 1 83% மட்டுமே!

(சி-4634)

- அதி கூடிய அடகுப்பணம்
- மிகக் குறைந்த வட்டி
- விரைவான சேவை
- தவணை முறையில் மாதாந்தம் மீளச் செலுத்தும் வசதி
- அடகு நகைகளுக்கு இலவச காப்புறுதி
- கணனி மூலம் மதிப்பீடு செய்யப்படுவதால் தங்க நகைகளுக்கு சேதம் ஏற்படாது
- உயர் பாதுகாப்பும் கொடுக்கல் வாங்கல்களில் பூரண இரகசியமும் பேணப்படும்

மேலதிக விபரங்களுக்கு ஹற்றன் நஷனல் வங்கி யாழ் கிளையுடன் தொடர்பு கொள்ளவும்

**ஹற்றன் நஷனல் வங்கி**

உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி

## சிறு விளம்பரம்


### தேவை

யாழ் மாநகரபகுதியிலும், அதனை அண்டிய பகுதிகளிலும், மானிப்பாயிலும் கடை அல்லது கடைபோடக் கூடிய இடங்கள் உடன் தேவை. நல்லவாடகையும் முற்பணமும் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு: S தயாபரன், சுதுமலை மேற்கு, தாவடிறோட், மானிப்பாய். T.P3429 (C-4887)


## விபத்தில் ஒருவர் பலி

(மட்டக்களப்பு)

சைக்கிளில் பயணம் செய்து கொண்டிருந்த வேளையில் எதிரே வந்த லொறியுடன் மோதியதில் ஒருவர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டார். மற்றவர் பலத்தகாயங்களுக்குள்ளானார்.

நேற்று நண்பகல் இவ் அனர்த்தம் ஆரையம்பதியில் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-10)

## கருத்தரங்கு

(கொழும்பு)

'செப்டெம்பர் 11 க்குபின்னர் உலகில் அதன் தொடக்கம்' என்ற தலைப்பில் சர்வதேச கருத்தரங்கு ஒன்று இம் மாதம் 29 ஆம் திகதி தொடக்கம் செப்டெம்பர் முதலாம் திகதி வரைபண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஆசிய, ஆபிரிக்க கூட்டுறவுச் சங்கம் இம்மாநாட்டை ஏற்பாடு செய்துள்ளது. (க-3)

## கரப்பந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

புத்தூர் மேற்கு கலைமதி விளையாட்டுக் கழகம் மின்னொளியில் நடத்தும் 6 பேர் கொண்ட கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் இன்று இரவு 8.00 மணிக்கு உடுப்பிட்டி சிவகுமாரன் வி.க. எதிர் சுன்னாகம் நியூஸ்ரார் வி.க,

இரவு 8 30 மணிக்கு சிறுப்பிட்டி கலைமகள் வி.க, எதிர் உடுவில் சென்மேரிஸ் வி.க ஆகியன மோதவுள்ளன.

★ ★ ★

கலைமதி விளையாட்டுக் கழகம் மின்னொளியில் நடத்தும் கரப்பந்தாட்டத்தில் (செற்றப்கேம்) இன்று இரவு 8.00 மணிக்கு இந்து இளைஞர் வி.க, எதிர் புத்தூர் கலைமதி வி.க ஆகியன மோதவுள்ளன. (க-3)

அரசு சமர்ப்பிக்கவுள்ள நம்பிக்கைப் பிரேரணைக்கு

# ஆதரவாகவோ எதிராகவோ வாக்களிக்கப் போவதில்லை

### அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய தேசியக் கட்சிதலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி எதிர்வரும் 29 ஆம் திகதி பாராளுமன்றில் சமர்ப்பிக்க உத்தேசித்துள்ள நம்பிக்கைப் பிரேரணைக்கு ஆதரவாகவோ எதிராகவோ செயற்படப்போதில்லை.

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் செயற் குழு கூட்டத்தின் போது மேற்சண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அத்தீர்மானத்தின் போது மேற்கொள்ளப்பட்ட விடயங்கள் பின்வருமாறு,

வடக்கு-கிழக்கு தமிழர் தாயகத்தில் இயல்பு நிலை உருவாக்கப்படாத காரணத்தினாலும் அதிஉயர் பாதுகாப்பு வலய கெடுபிடிகள் இப்பொழுதும் நடைமுறையில் இருப்பதாலும் அதன் காரணமாக இலட்சக்கணக்கான இடம்பெயர்ந்த தமிழ் மக்கள் மீள்குடியமர முடியாமல் தடுக்கப்பட்ட நிலையில் இருப்பதாலும் வடக்கு-கிழக்கு தமிழர் தாயகத்தில் கரையோர பகுதிகள்எல்லாம் இப்பொழுதும் மக்களின் நடமாட்டத்திற்கு தடைசெய்யப்பட்ட பிரதேசங்களாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள நிலை தொடர்கிறது.

நாரந்தனையில் கடந்த 16ஆம் திகதி கடற்படையினரால் பொதுமக்கள் தாக்கப்பட்ட சம்பவத்தை வன்மையாக கண்டிப்பதுடன் அதில் சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராகஉடனடிசட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் சட்சி வலியுறுத்திக் கேட்கிறது.

தமிழக அரசினால்அரசியல் காரணங்களுக்காக ஈழத் தமிழர்களுக்காககுரல்கொடுக்கும் உலகத் தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழநெடுமாறன் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழக செயலர் வைகோபாலசாமி மற்றும் சுப வீரபாண்டியன் போன்ற தமிழ் தலைவர்களை கைது செய்து சிறையில் அடைத்தமையையும் உலகத் தமிழர் தேசிய இயக்கத்தை தடைசெய்தமையையும் மிக வன்மையாக கட்சி கண்டிக்கிறது இதுதொடர்பாக கட்சித் தலைவர் ஏற்கனவே பத்திரிகைகளுக்கு வெளியிட்ட அறிக்கையை மீண்டும் வலியுறுத்தி கைது செய்யப்பட்ட தலைவர்களை உடனடியாக விடுதலை செய்ய இந்திய மத்திய அரசு நடவடிக்கைஎடுக்க வேண்டும் எனவும் கட்சி வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

இவ்வாறு அத்தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## இராசி பலன்

26.08.2002
(ஆவணி 10 திங்கள்)
திருதியை மு ப 9.20
உத்திரட்டாதி பி ப 1.44
இராகுகாலம் 7.35-9.05
நல்லநேரம் 12.05-1.35

**மேடம்**
பணவிரயம், கர்வத்தினால் கெடுதல், மனச்சஞ்சலம் தந்தைதாய்பற்றியகவலை

**இடபம்**
நண்பர்கள்சந்திப்பு, புகழ், பெருமை, தெய்வதரிசனம்

**மிதுனம்**
நல்லசெய்தி, தொழில் வெற்றி, கடின உழைப்பு முயற்சி வெற்றி

**கடகம்**
கட்டுப்பாடு, திட்டமிடல், வீண்பயம், உடல்உழைப்பு

**சிங்கம்**
எதிர்ப்பு, வீண்தொல்லை எதிர்பாராதஅச்சம், உடல் வலி

**கன்னி**
கௌரவம் உண்டாதல், பொருள்சேர்க்கை, திடீர் பயணம், அபூர்வசந்திப்பு

**துலாம்**
நோய்கள் குணமடையும் பகைவர்விலகுவர், திடீர்பயணம்

**விருச்சிகம்**
இடையூறு ஏற்படுதல் தாழ்வுநிலை, தொழிலில் இடைஞ்சல், கவலைஉண்டாதல்

**தனுசு**
கல்விமேன்மை, அவநம்பிக்கை, ரோகபயம், மனப்பயம்

**மகரம்**
புதியபொருள்சேர்க்கை, பணவரவு, முயற்சிவெற்றி வாக்குமேன்மை

**கும்பம்**
மதிப்புக்குறைவு, காரியத் தடை, மாதர்நட்பு, பொருள் விரயம்

**மீனம்**
புதியபொருள்வரவு, ஜனவசியம், ஆழ்ந்தசிந்தை, பெரியோர்ஆசி

வளவன்

# சிவில் நிர்வாக அலுவலகப் பொருட்கள் சூறை

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை சுணக்கர் சந்திப்பகுதியில் அமைந்துள்ள சிவில் நிர்வாக அலுவலகம் இரவு வேளையில் இனம் தெரியாதோரால் உடைக்கப்பட்டு பெறுமதி வாய்ந்த பொருட்கள் சூறையாடப்பட்டுள்ளன.

இச் சம்பவம் குறித்து வருத்தம் தெரிவித்த இராணுவ சிவில் நிர்வாக அதிகாரி இதனால்பாதிக்கப்படப் போவது பொது மக்களே.

இச் சம்பவங்களால் தற்போதைய நல்லெண்ண சூழல் கூட பாதிப்படையலாம் எனவும் அவ் அதிகாரி எச்சரிக்கை விடுத்தார். (க-262)

## புலிகள்-அரசு

# பேச்சு விபரங்களை பிரதமர் அறிவிப்பார்

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தமிழீழ விடுதலைப் புலிகளுடனான தனது சமாதான முயற்சிகள் பற்றி செப்ரெம்பரில் தாய்லாந்தில் ஆரம்பமாகும் பேச்சுவார்த்தைகளையடுத்து உலகுக்கு அறிவிக்க உள்ளார்.

செப்ரெம்டரில் நடைபெறஉள்ள ஐக்கிய நாடுகள் சபையின் பொதுக் கூட்டத்தில் கலந்துகொள்ளும் பிரதமர் தனது சமாதான திட்டம்பற்றிய உரையொன்றின் மூலம் பேச்சுவார்த்தை விபரங்களை உலகுக்கு அறியச்செய்யவுள்ளதாக பிரதமர் அலுவலகத்துடன் நெருங்கிய வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. (க-3)

## பாடசாலைகள்

# இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

சகல அரசாங்கப் பாடசாலைகளுக்கான மூன்றாம் தவணை இன்று ஆரம்பமாகவுள்ளது. இப்பாடசாலைகளின் மூன்றாம் தவணைக்கான விடுமுறை நவம்பர் 29 ஆம் திகதி என அறிவிக்கப்பட்டுள்ளது. (க-8)

# உரக் களஞ்சியங்கள் சீல் வைத்து மூடப்பட்டன

(கொழும்பு)

கொழும்பு எம்பிலிப்பிட்டி என்னும் இடத்தில் இரண்டு உரக் களஞ்சியங்களுக்கு உள்துறை அமைச்சு அதிகாரிகள் நேற்றுமுன்தினம் சீல் வைத்து மூடியுள்ளனர்.

இவ்விரு களஞ்சிய முகாமையாளர்களும் உரங்களிற்குத் தட்டுப்பாடு நிலவியுள்ளதாக மக்கள் மத்தியில் பொய்ப் பிரசாரங்களை பரப்பி உரங்களை பதுக்கி வைத்தமையை அடுத்தே இக் களஞ்சியங்கள் மூடப்பட்டன.

மக்களின் முறையீட்டையடுத்து இவ்விரு களஞ்சியங்களுக்கும் விரைந்த அதிகாரிகள் 1700 தொன் உரங்களை கைப்பற்றியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (க-10)

# புதிதாக அமைக்கப்பட்ட நீர்த் தொட்டி இடிந்தது

### நீர்எடுக்கச் சென்ற சிறுமிகள் படுகாயம்

(ஊர்காவற்றுறை)

தண்ணீர் தொட்டி இடிந்து விழுந்ததில் தண்ணீர் எடுக்கச் சென்ற சிறுமிகள் இருவர் படுகாயம்அடைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை நண்பகல் அளவில் சரவணை கிழக்கு தொல்காப்பியர் சன சமூக நிலையத்திற்கு அருகில் உள்ளமேற்படி தண்ணீர் தொட்டியில்வேலணைப்பிரதேச சபையினர் நீர்நிரப்பிக் கொண்டிருந்த வேளை இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

குறித்த தொட்டி கடந்த 20 நாட்களுக்கு முன்னரே புதிதாக அமைக்கப்பட்டது என்பதும் இத்தொட்டியினுள் இரண்டாவது தடவை நீர் நிரப்பும் போதே இடிந்து வீழ்ந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

மாதனைகிழக்கைச் சேர்ந்த எம்.மதுரா (வயது10), சரவணை கிழக்கைச் சேர்ந்த வி.ஸ்ரீசாரதா ஆகியோரே மேறபடிசம்பவத்தில்படுகாயமடைந்தவர்களாவர். (உ-75,2)

## படைத் தலைமைப் பீடம்

# பெரும் முட்டுக்கட்டை சிப்பாய் அதிருப்திவெளியீடு

(திருநெல்வேலி)

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும சிறிலங்கா அரசிற்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தானதில் இருந்து படையினர் ஆயுதமின்றி. இராணுவ சீருடையின்றி ஏ-9 பாதையூடாக விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதியினுள் போககுவரத்தில் ஈடுபட ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ள போதும் படைத் தலைமைப்பீடம் படைத்தரப்பிற்கு முட்டுக்கட்டை பேடுவதாக படைத்துறையில் கீழ்மட்ட அதிகாரிகள், சிப்பாய்கள் அதிருப்தி வெளியிடடுள்ளனர்.

இதேவேளை, விடுதலைப் புலிகள் படையினரின் கட்டுப்பாட்டினுள் போக்குவரத்தில் ஈடுபட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை, படை உயர் அதிகாரிகள் ஒவ்வொருவரும் விடுமுறையில் தென்பகுதிக்கு சென்று வருவதாகவும்.

சாதாரண சிப்பாய்களாகிய தாங்கள் இச் சமாதான சூழ்நிலை நிலவும் காலத்தில் ஆறு மாதங்களுக்கு மேலாக விடுமுறையில் செல்ல அனுமதிக்கவில்லை என்றும் முகமாலை சோதனைச்சாவடியில் உள்ள படையினர் கவலை வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை படைத்தலைமைப் பீடம் அரசபடைகள் புலிகளின் சோதனைச் சாவடிகளைத் தாண்டிச் செல்வதா என கேள்வி எழுப்பியுள்ளது. (க-43)

# தமிழ்க் கைதிகள் விடுதலை நாளை முக்கிய கூட்டம்

(கொழும்பு)

சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ளதமிழ் அரசியல்கைதிகளின் விடுதலைதொடர்பான முக்கிய கூட்டம் கொழும்பு மனிதஉரிமைக்கும் அபிவிருத்திக்குமான நிலையத்தில் நாளை செய்வாய் நடைபெறவுள்ளது.

தமிழ் இளைஞர்களின் விடுதலை தொடர்பாக அக்கறை உடையவர்கள் இக் கூட்டத்தில் கலந்து கொள்ளலாமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-10)

# நம்பிக்கைப் பிரேரணை 29 இல் பாராளுமன்றில்

(கொழும்பு)

பிரதமர் ரணில்விக்கிரமசிங்காவுக்கும் பாராளுமன்ற அமைச்சரவைக்கும்இடையில் நம்பிக்கை தெரிவிக்கும் பிரேரணை ஒன்று எதிர்வரும் 29 ஆம் திகதிபாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இதற்கான தீர்மானம் கட்சித் தலைவர்களின் கூட்டத்தின் போது எடுக்கப்பட்டதாக பாராளுமன்ற சபாநாயகரின்அலுவலக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்:

இத்தீர்மானம் நிறைவேற்றப்படும் பட்சத்தில் பாராளுமன்றத்தில் பிரதமருக்கும் அமைச்சரவைக்கும் இடையான உறவுகள் வலுப்படையும் என அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். (க-8)

## நல்லூரான் திருவடிக்கு-14



### நல்லூர்ப் புதுமை

'மாத்தளையால்' வந்த வடிவேல் நிமிர்ந்து நிற்கும்
தீர்த்தத் திருக்கேணி தேன் சுரக்கும்- பூத்த
புதிய கொடித்தம்பம் புன்னகைக்கும்; நல்லூர்ப்
புதுமையொவ் வொன்றும் புதிர்.

ஏதோ வசியம் இருக்கிறது நல்லூரில்
'போதனையால்' ஏய்க்காது பொய்மையற்று
— காதலன்பை,
உள்ளொளியைப், பேரின்ப ஊற்றை, 'மவுன'மாக
அள்ளித் தரும்கோவில் ஆம்.

மென்மை அமைதியினை மேன்மை பணிவைநல்கும்
இன்பநதி மூலம் இதுவென்று- கண்டுணர்வாய்!
காவடிகள் தூக்கிடுவாய்! தேரடியில்
வீழ்ந்தெழுவாய்!
பூவடிவாய் வாழ்வாய்... புரி.

மக்கள் அலையடிக்க ஞான மழையடிக்க
திக்குத் திசையெல்லாந் தெய்வீகம்- நிற்க
எழிலுருவாய் நாத இசை முழுகும் கந்தன்
விழாநாளில் வைப்பான் விருந்து.

பெரிசு சிறிசென்ற பேதமற்று ... மக்கள்
உருகித் தொழுதுபக்தி என்னும் - விழுதுபற்றி
நல்மோட்சம் காணவைக்கும ந ்லூரில்
கால்பட்டால்
தொல்லையெல ாம் நீறும் தொழு.

த. ஜெயசீலன்.

### வேல் எடுத்து விளையாடும் வேலவா

பரமசிவன் புத்திரனே வேலவா- உந்தன்
பக்தர் எமைக்காத்து அருள் தருவாய்!
வள்ளி மணவாளனே வேலவா கந்தா
வண்ணமயில் ஏறி இங்கு அருள் புரிவாயே,

நிதி

### நம் தவப்பயனன்றோ

எம் கண்ணீராலுன்
பாதங் கழுவுகிறேன்!
பன்னீரும், சந்தனமும்
பழம், பாக்கு, நிவேதனமும்,
தூயவன்புக் கீடாமோ!
கல்லையு முருக்கி விடும்,
கதிர் வேலவனே...
நல்லூர் வேல் முருகா!
நம்தமிழ்ப் பகுதியில்,
நீயிருந்தருள்வது,
நம் தவப்பயனன்றோ;

மாருதி
ஆவரங்கால்.

### என்றுமே அடைக்கலமே

கலியுகத்தின் வரதனே!
நவயுக மலர்ச்சிக்காய்
நல்கிடும் வேலவனே!
தந்தைக்கே
தர்மஉபதேசம் புரிந்த
எம்குமரா!

நல்லையில் இருந்து வரம்
நல்கிடும் நல்லோனே!
பணிந்திடுவோம் உன்பாதம்
என்றுமே அடைக்கலமாய்!

என். ஜெனார்த்தனன்

### நல்வாழ்வை தாருமையா

நாவினில் இனிப்பவனே நல்லூரின் நாயகனே- என்
பாவினில் இனிப்பவனே பார்வதி மைந்தனே
- இந்தத்
தீவினில் தினம் தீர்வின்றித் தவிக்கிறோம்
பாவிகள் எமக்கோர் புதுவாழ்வினைத் தாருமையா!

த. அஜந்தகுமார்

## சிம்பாவேயின் நிலச் சீர் திருத்தக் கொள்கைக்கு மேற்கு நாடுகள் கடும் கண்டனம்

(ஹராரே)

சிம்பாவேயிலுள்ள வெள்ளை இன விவசாயிகளை அந்நாட்டரசு விரட்டி வரும் நிலச் சீர்திருத்த கொள்கையை மேற்கு நாடுகள் வன்மையாக கண்டித்துள்ளன.

லண்டன் ஒப்சேவர் பத்திரிகைக்கு பிரிட்டிஷ் வெளிநாட்டு அமைச்சர் யத்ஸ்ரோ எழுதியகட்டுரை ஒன்றிலேயே இவ்வாறான கண்டனம் வெளியிடப்பட்டுள்ளது.

இதனால், சிம்பாவே ஜனாதிபதி ரொபேட் முஹாபேயிற்கு எதிராகநடவடிக்கைகளை எடுக்க வேண்டிய நிர்ப்பந்தம், பிரிட்டிஷ் அரசுக்கு ஏற்பட்டுள்ளது எனவும் அக் கட்டுரையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

சிம்பாவே ஜனாதிபதி கறுப்பின விவசாயிகளின் காணிகளை விட்டு உடனடியாக வெள்ளையின விவசாயிகள் வெளியேற வேண்டும் எனவும், இல்லையேல் அதற்கெதிரான நடவடிக்கைகளை தனது அரசு மேற்கொள்ளும் எனவும் ரொபேட் முஹாபே வெள்ளை இனத்தவர்களை எச்சரித்து வருகின்றமையும் ஏற்கனவே தெரிந்ததே.

(க-08)

---

### தந்தையின்

றிணைந்த முஸ்லிம்களையும் இணைத்து இதனை முன்னெடுத்த பெருமையும் தலைவர் அமிர்தலிங்கத்திற்கு உண்டு.

இனத்திற்கு பெருமை சேர்த்த நாவன்மை

இவை எல்லாவற்றிற்கும் மேலாக அவரது நாவன்மை உள்ளூரிலும் வெளியூரிலும் நமது இனத்துக்கே பெருமை சேர்த்தது இவர் நாவசைந்ததால் தமிழ் மக்கள் தமிழ்த் தேசியத்தைஇறுகப்பற்றி நின்றனர். பாராளுமன்றத்தில் 1956 ஆம் ஆண்டு தொடக்கம் தமிழர் பிரதிநிதிகள் ஆற்றிய உரைகளில் தலைவர் உரை மிகக்காத்திரமானவை. குறிப்பாக எதிர்க்கட்சித் தலைவராக இருந்த காலத்தில் பாராளுமன்றத்தில் தமிழரின் போராட்டத்திற்குரிய நியாயங்களை வெளிக்காட்டி எக் காரணங் கொண்டும் சரணடைய மாட்டோம் என முழங்கிய உரைகள் சிறப்பானவை. ஒரு முதிர்ச்சியான, முழுமையான தமிழர் தலைவனாகப் பாராளுமன்ற அரசியலில் தலைவர் அமிர்தலிங்கம் பிரகாசித்த காலகட்டமது. தமது நடை, உடை, பாவனைகளால் அப்போது பாராளுமன்றம் வந்த சிங்கள இளம் பிரதிநிதிகளையும் கவர்ந்தவர். சுருங்கக் கூறின் இவருடன் உரையாட இவரின் அனுபவத்தைப் பகிர்ந்து கொள்ள இவரை இவர்கள் சுற்றி வளைத்த காலமது. இவரின் நாவன்மை இந்தியாவை மட்டுமல்ல உலகின் பிறநாடுகளை நமது உரிமைப் போரின் நியாயத்தை உணர வைத்தது. இவரளித்த பத்திரிகைப் பேட்டிகள் மிகவும் காத்திரமானவை. அபாரமான ஞாபகசக்தி மூலம் ஆற்றொழுக்குப் போல் போராட்ட வரலாற்றைப் பேட்டியாக அளிக்கும் திறமை இவரிடம் மட்டுமே காணப்பட்டது. பேட்டியில் தளம்பாது ஒரு சொல்லை விட்டு இன்னொரு சொல்லை போட முடியாதவாறு சிறப்பான முறையில் இவற்றை அளிக்கும் பெருமை இவருக்கிருந்தது. சுருக்கக் கூறின் இவரின் தமிழ், ஆங்கிலப் புலமை, நாவன்மை, எமது இனத்திற்கே பெருமை சேர்த்தன. எதிர்க்கட்சித் தலைமைப் பதவி தமக்குக் கிடைத்த போது அது ஒரு அரசியல் விபத்து எனக்கூறி தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளை, அதனைப்பயன்படுத்தி உலகறியச் செய்த பெருமை இவருக்குத்தான் உண்டு.

ஒரு தலைவனின் மிகப் பெரிய பங்களிப்பு யாதெனில் தனது இலட்சியத்தை முன்னெடுத்துச் செல்லத் தளபதிகளை உருவாக்குவதுதான். தந்தை செல்வாவின் தளபதியாகிய தலைவர் அமிர்தலிங்கம் அவர்கள் தன்னுடனேயே இப்போராட்டத்தில் கதை முடியக்கூடாது என்ற தூய சிந்தனையினால் உந்தப்பட்டு இப்பெரும்பணியைப் பூரணமாகஒப்பேற்றிவைத்தனர்.

இதனால் பாராளுமன்ற அரசியலில்தம்மைப் போன்று துடிப்புடனும்இலட்சியப்பற்றுடனும்செயல்படக்கூடியதலைவர்களைஉருவாக்கியது மட்டுமன்றி ஆயுதப் போராட்டத்தில்முன்னின்று உழைத்த' உழைக்கும் தலைவர்களையும் உருவாக்கியவரும் இவரேதான். இதனால் தமிழ்த் தேசியப் போராட்டம் ஒரு தொடர்ச்சியான, முழுமையான வடிவத்தைப் பெறக் கால்கோளாக நின்று வழி சமைத்தபெருமகனாகிறார்.

---

32 ஆயிரத்து 200 கோடி ரூபா

## வட்டியாக வருடாந்தம் செலவு செய்யப்படுகிறது

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக் காலத்தின் போது பெற்ற வெளிநாட்டுக் கடன்களிற்கான வட்டியாக வருடாந்தம் 32 ஆயிரத்து 200 கோடி ரூபா செலவிடப் படுகிறது.

இவ்வாறு மத்தியபிராந்திய அபிவிருத்தி அமைச்சர் திஸ்ஸ அத்த நாயக்க ஹப்புகந்தையில் நடைபெற்றநிகழ்வொன்றில்உரையாற்றும்போது தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்; தற்போது நாடு கடன் சுமையில் தத்தளித்துக் கொண்டிருக்கிறது. இதனை தீர்த்துவைக்கும் சகலநடவடிக்கைகளிலும் ஐக்கிய தேசியமுன்னணி அரசு தன்னால் இயன்ற நடவடிக்கைகளையும் மேற் கெண்டு வருகிறது.

வர்த்தகர்களுக்குசகல வசதி வாய்புக்களையும் ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம், சீரழிந்துள்ள பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்ப முடியும் என்ற நம்பிக்கையில்அரசு சகல முயற்சிகளையும்எடுத்து வருகிறது.

அரசாங்கம் வர்த்தக நடவடிக்கைகளை குறித்த முயற்சிகளை கைவிட்டு, அவற்றை தனியார் வர்த்தகர்களிடம் கையளிப்பதன் மூலமே சீரழிந்த பொருளாதாரத்தை சீர் செய்ய முடியும் என்ற எண்ணத்துடன் செயற்பட்டு வருகின்றது.

எனினும், நாட்டின் அபிவிருத்திக்கு தடையாகவுள்ள சில குழுக்கள், நட்டமடைந்துள்ள நிறுவனங்களை அரசு, தனியாருக்குவிற்பனைசெய்ய வேண்டும்எனவலியுறுத்திவருகின்றன எனவும் சுட்டிக் காட்டியுள்ளார். (க-8)

## தாலிக்கொடி அறுத்த சிறுவன் அகப்பட்டான்

(நெல்லியடி)

செல்வச்சந்நிதி ரதஉற்சவத்தன்று கோவிலினுள் வழிபட்டுக் கொண்டிருந்த பெண்மணி ஒருவரின் தாலிக் கொடியை அறுத்த சிறுவன் அப்பெண்மணியால் கையும் மெய்யுமாக பிடிக்கப்பட்டான்.

குறட்டினால் தாலிக் கொடியை வெட்டி அபகரிக்க முனைந்தபோதே சிறுவன் வசமாக மாட்டிக்கொண்டான். பிடிக்கப்பட்ட சிறுவன்பொது மக்களால்கடுமையாக நையப் புடைக்கப்பட்டார்.

ஆலய உற்சவங்களில் கலந்து கொள்ளும் பெண் அடியார்கள் நகைகளை அணியாமல் எளிமையாகச் செல்வதன் மூலம் இத்தகைய ஆபத்துக்களிலிருந்து தப்பிக்கொள்ள வாய்ப்பாக இருக்கும் என்று பொதுமக்கள், மற்றும் ஆலய நிர்வாகிகள் எச்சரித்து வருவதும் இங்குகுறிப்பிடத்தக்கது.

(க-247)

## அடுத்த மாதம் 09 இல் சமாதானப் பேரணி கொழும்பில் நடத்த ஏற்பாடு

யுத்தத்தின் போது காணாமல் போன படைவீரர்களின் உறவினர்கள் சங்க ஏற்பாட்டில் அடுத்தமாதம் 9 ஆம் திகதி கொழும்பில் சமாதானப் பேரணி ஒன்று நடத்தப் படவுள்ளதாக சங்கத்தின் பிரதிநிதி கி.பி. நாணயக்கார தெரிவித்துள்ளார்.

சமாதான நடவடிக்கைகளுக்கு ஆதரவு வழங்கும் திட்டத்தின் கீழே இச் சமாதானப் பேரணி நடத்தப்படவுள்ளது.

இப் பேரணியின் போது சமாதானத்தை விரும்பும் அனைத்துஅரசசார்பற்றஅரச நிறுவனங்களும், தொண்டர்களும், கட்சிகளும் பங்கேற்கவுள்ளனர்;

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவினாலும், தமிழீழவிடுதலைப் புலிகளினாலும் முன்னெடுத்துச் செல்லப்படும் சமாதானமுயற்சிகள் யாவும், நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென, நாட்டில் பல்வேறு அமைப்புகளும், நிறுவனங்களும் கூட்டங்களையும், பேரணிகளையும் தியானங்களையும் நடத்தி வருகின்றமை தெரிந்ததே. (க-8)

## விண்ணப்பம் கோரல்

கிராம உத்தியோகத்தர் சேவையின் தரம் II ற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பங்கள் ஒக்டோபர் மாதம் 11 ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சை ஆணையாளர் நாயகம், பரீட்சைத் திணைக்களம், பத்தரமுல்ல என்னும் முகவரிக்கு அனுப்ப வேண்டும் (உ-3)

## தமது கருத்துக்களை
# சுயமாக வெளிப்படுத்த முடியாத நிலையில்
# இலக்கியவாதிகள் தவிக்கின்றனர்
## பேராசிரியர் அ. சண்முகதாஸ் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கையைப் பொறுத்த வரை பத்திரிகையாளர்களும் எழுத்தாளர்களும் தமதுகருத்துக்களையும், எண்ணங்களையும் விமர்சனங்களையும் வெளிப்படையாக எழுத முடியாத நிலை காணப்படுகின்றது. இந்த நிலை நிச்சயம் மாற வேண்டும், என 'மணல் வெளி அரங்கு' என்ற நூல் வெளியீட்டின்போது முன்னைநாள் உயர்பட்டப் படிப்புக்கள் பீடாதிபதி பேராசிரியர் அ.சண்முகதாஸ் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் புவியியற்றுறை மண்டபத்தில்வணிகத்துறைத் தலைவர் தேவராஜா தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில்பேராசிரியர்சண்முகதாஸ் தொடர்ந்து உரையாற்றும் பொழுது,

யாழ்ப்பாணத்திலேதிறமையிருந்தும் பலஎழுத்தாளர்கள் தமது படைப்புக்களை வெளியிடுவதில்லை. இவ்வாறு ஒரு படைப்பாளி தனது படைப்புக்களை வெளியிடாமல்இருந்தால் அவரின் திறமைகள் மறைக்கப்படுவதுடன் சமூகத்திற்கு நல்ல ஆரோக்கியமான விமர்சனங்களும் கருத்துக்களும் கிடைக்க மாட்டாது. எனவே இவ்விடயத்தை சம்பந்தப்பட்ட படைப்பாளிகள் கவனத்திலெடுக்க வேண்டும்.

இந்தியாவை விட யாழ்ப்பாணத்தில் உள்ள மக்களின் படிப்பறிவு வீதம் அதிகமாக இருந்தாலும் குறைந்தளவு நூல்களே யாழ்ப்பாணத்தில் உருவாக்கம் பெறுகின்றன. ஆனால் இந்தியாவில்பலநூல்கள் தினம்தோறும் வெளியிடப்பட்டு வருகின்றன.

சிறுகதைகளைப் பொறுத்த வரை ஒரு நாவல் மூலமோ பெரும் கதை மூலமோ உணர்த்த முடியாத கருத்தை சிறு கதைகள் இலகுவாக உணர்த்தி நிற்கின்றன குறிப்பாக அந்த அந்தக் காலத்தில் எழும் சிறுகதைகள் அக்காலத்து சமூக சூழலை சித்திரிக்கின்றன. எனவே தான் சிறு கதைகள் காலத்தின் கண்ணாடிகள் என்று சொல்லப்படுகின்றன.

இயந்திர கதியில் செயற்பட்டுக்கொண்டிருக்கும் நாம் ஆன்மீகம், இலக்கியங்கள் போன்றவற்றில் ஈடுபட்டுஅதனைச் சுவைப்பதன் மூலம் அரிய மானிடப்பிறவியின் பயனை அனுபவித்துக் கொள்ள முடியுமென அவர் தெரிவித்துள்ளார்.

பிரமுகர்கள், இலக்கிய ஆர்வலர்கள் பலரும் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

(க-19)

## புதிய நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரிஸ்ரீ பழனி ஆண்டவர் ஆலய பரிபாலன சபையின் வருடாந்தப்பொதுக்கூட்டம் வை. இராசரத்தினம் தலைமையில் அண்மையில் நடைபெற்ற போது,

நடப்பு வருடத்திற்குரிய தலைவராக வை. இராசரத்தினமும், உபதலைவராக சி. மகாலிங்கமும், செயலாளராக ம. விவேகானந்தனும், உபசெயலாளராக சு. சிவராசாவும், பொருளாளராக க. ஜெயரூபனும், நிர்வாக சபை உறுப்பினர்களாக த. விபுதராசா, க. சிவானந்தன், சி. இராசையா, செல்வி ர. வைரமுத்து ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

(உ-3)

## வீதி விஸ்தரிப்பில் ஈடுபட்ட
# கல்லூர்தியில் நசிந்து தொழிலாளர்கள் பலி

(கொழும்பு)

வீதிவிஸ்தரிப்புப் பணியில் ஈடுபட்டிருந்த கல்லூர்தியொன்றில் நசுங்குண்டு தொழிலாளர்கள் இருவர் அந்தவிடத்திலேயே பலியாகினர்.

இரத்தினபுரியில் இப்பரிதாபச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதேவேளை, கல்லூர்தியைச் செலுத்தியவர்சாரதி அனுமதிப் பத்திரம் பெற்றவர் அல்ல எனத்தெரியவந்துள்ளது.

(உ)

## எலக் ரோனிக் லங்காவுக்கு ஆந்திரா ஆதரவு
## முதல்வர் நாயுடு தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள 'எலக் ரோனிக் லங்கா' திட்டத்துக்கு ஆந்திராப் பிரதேச முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு பூரண ஆதரவைத் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் புதுடில்லி விமான நிலையத்திலிருந்து ஹைதாரபாத் போய்ச் சேர்ந்துள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவை வரவேற்று விருந்துபசாரம் அளித்து பேசும் போதே முதலமைச்சர் நாயுடு இவ்வாறு தெரிவித்துள்ளார்.

புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள இத் திட்டத்தின் மூலம் மக்களுக்கு தகவல் தொழில் நுட்பத்தைக் கணனிக் கல்வியறிவையும் புகட்ட முடியும் என்பதுடன் இத் திட்டத்தின் நோக்கமும் இதுவே ஆகும் என்றும் தெரிவித்தார்.

இது குறித்து ஆராய ஆந்திரப் பிரதேச அதிகாரிகள் அடங்கிய குழு வொன்றை இலங்கைக்கு அனுப்பி வைக்கவுள்ளதாகவும் முதலமைச்சர் நாயுடு அங்கு தெரிவித்துள்ளார்.

(க-8)

## இருபத்தைந்து வீதமான
# வன்னி மாணவர்கள் உள ரீதியாகப் பாதிப்பு

(வவுனியா)

வன்னிப் பிரதேசத்தில் போரின் விளைவுகளால் 25 சதவீத மாணவர்கள் உளரீதியாக பாதிக்கப்பட்டுள்ளனர்

அங்கு 5 கல்வி வலயங்களிலும் புனர்வாழ்வு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள ஜேர்மன் அரசின ஜி.ரி.சற் நிறுவனம் மேற்கொண்ட ஆய்விலிருந்து இத்தகவல் தெரிய வந்துள்ளது.

ஆரம்ப கல்வி கற்கும் 13 ஆயிரத்து500 மாணவர்களே போரின் விளைவுகளால் உளரீதியாக பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும், வயதுகூடிய மாணவர்கள், மெதுவாக கல்வி கற்கும் மாணவர்கள், பாடசாலை செல்லாத இடை விலகிய மாணவர்கள், ஒழுங்காக சமூகம் அளிக்காத மாணவர்கள் என வகைப்படுத்தப்பட்டுபுனர்வாழ்வு அளிக்க வேண்டிய அவசியம்குறித்தும் ஜி.ரி.சற் தனது அறிகையில குறிப்பிட்டுள்ளது.

(உ)

## சந்நிதி தேர் உற்சவத்தில் மட்டும்
# பருத்தித்துறைடிப்போவுக்கு 2 இலட்சம் வருமானம்

(நெல்லியடி)

தொண்டமானாறு செல்வச் சந்நிதி தேர் உற்சவத்தில் மட்டும் வட-பிராந்திய போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறை டிப்போவுக்கு 1 லட்சத்து 90 ஆயிரம் ரூபாவுக்குமேல் வருமானம்கிடைத்துள்ளது.

நாட்டில் ஏற்பட்ட சுமுக நிலையை அடுத்து பெருமளவு அடியார்கள் வட-பிராந்தியப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்களில் ஆலய உற்சவங்களுக்கு சென்றுவந்தமையே இவ் வருமானம அதிகரிக்க காரணம் எனக்கூறப்படுகிறது.

இதேவேளையில், சந்நிதி ஆலய உற்சவத்தின்போது சிறப்பான வகையில் சேவையாற்றிய வட-பிராந்திய போக்குவரத்துச் சபைக்குப் பலரும் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

வழமையை விட இரத உற்சவத்தின் போது பெருமளவு அடியார்கள் திரண்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது

(க-247)

## பாடசாலைகளுக்கான
# முகாமைத்துவ திட்டம் அடுத்தமாதம் ஆரம்பம்

(கொழும்பு)

நாட்டின் பல பாகங்களிலும் உள்ள பாடசாலைகளுக்கான முகாமைத்துவத் திட்டம் அடுத்த மாத நடுப்பகுதியில் ஆரமபிக்கப்படும் என்று கல்வியமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு அறிவித்துள்ளார்.

அண்மையில் கல்விசார் நடவடிக்கைகள் தொடர்பாக வெளியீட்டாளர்கள் மத்தியில் இருந்து வரும் பிரச்சினைகளை கண்டறிவதற்காக நடத்தப்பட்ட கலந்துரையாடல் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பாடசாலைகள் உட்பட அனைத்து அரச கல்வி நிறுவனங்களிலும் இருந்து வரும், கல்விசார் நடவடிக்கைகள் குறித்த குறைபாடுகளை நிவர்த்தி செய்ய, தற்போதைய அரசு முயற்சி செய்து வருகின்றது எனவும், அவர் அங்கு சுட்டிக்காட்டியுள்ளார்.

(க-08)

## முன்பள்ளி விளையாட்டு போட்டி

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி ஸ்ரீ கணேசா முன்பள்ளி வருடாந்த விளையாட்டுப் போட்டி எதிர்வரும் 31 ஆம் திகதி பிற்பகல் 1.30 மணியளவில் நிலைய மைதானத்தில் இடம்பெற உள்ளது.

க. சுந்தரலிங்கம் தலைமையில் இடம்பெறும் மேற்படி நிகழ்வில் நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி அதிபர் இ. குணநாதன், யாழ். பல்கலைக் கழக இந்து நாகரிகத் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ப. கணேசலிங்கம், நீர்வேலி தெற்கு கிராம அலுவலர் சு. சண்முகவடிவேல், உட்பட பிரமுகர்கள் பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

(க)

## யுனிசெவ் புதியபிரதிநிதி

(கொழும்பு)

இலங்கை, மாலைதீவு நாடுகளுக்கான யுனிசெவ் அமைப்பின புதிய பிரதிநிதியாக அமெரிக்கப் பிரஜையான எட்வேர்ட் சைபன் நியமிக்கப்கப்பட்டுள்ளார். இவர் தனது கடமையை கடந்தவாரம் பொறுப்பேற்றுள்ளார்.

தென்னாபிரிக்கா மற்றும் யுனிசெவ் தலைமையகத்தின் அவசர ஆலோசகராக இவர் கடமையாற்றியுள்ளார். மற்றும் சூடான், நைரோபி, கென்யா ஆகிய நாடுகளில் திட்ட அதிகாரியாகவும், பிரதம பிரதி நடவடிக்கை அதிகாரியாகவும் கடமையாற்றியுள்ளார்.

(க-3)

## பேச்சுவார்த்தையை நிறுத்தி
# புலிகளை யுத்தத்தின்மூலம் ஒழித்துக் கட்ட வேண்டும்
## சிஹல உறுமய பிரமுகர் தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும இடையில் நடைபெற உள்ள பேச்சுவார்த்தையை உடன் நிறுத்தி அவர்களை யுத்தத்தின மூலம ஒழித்து கட்ட வேண்டும.

இவ்வாறு சிஹல உறுமய கொழும்பு மாவட்ட பிரதிநிதிகளின் மாநாடு நேற்று முன்தினம் நடைபெற்ற போது அக் கட்சியின் தேசிய அமைப்பாளர் ரட்பிக்கா ரணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; தலதா மாளிகையில் நடைபெற்ற தாக்குதலுக்கு எதிராக நாம் அலரி மாளிகை நோக்கி ஊர்வலமாக சென்ற போது இராணுவத்தினரும் பொலிஸ் [illegible] தடுத்தனர் ஆனால் அன்றிரவே தமிழீழ விடுதலைப் புலிகளை ஜனாதிபதி தடை செய்தார். விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்குவதற்குசிலசக்திகள் தீவிரமான முயற்சியில் ஈடுபட்டு வருகின்றன. அதிலும் ஐக்கிய தேசிய முன்னணியினான தலைவரும் பிரதமருமாகிய ரணில விக்கிரமசிங்க அதிக கவனத்துடன் செயற்படுகின்றார்.

ஆனால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் முயற்சிகளை தடுத்து நிறுத்தும் முழுப் பொறுப்பும் எம்மிடம் உள்ளது என்றும் தெரிவித்தார்.

கடந்த கால யுத்தத்தால் பெற்றிராத வெற்றிகளை புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் பெற்றிருக்கிறார்கள் என்று அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

(க-10)

## கொழும்பில் வர்த்தகக் கண்காட்சி

(கொழும்பு)

தெற்காசிய பிராந்தியத்தில் வர்த்தகத் துறையினை விரிவுபடுத்தும்நோக்கில் கொழும்பில் மாபெரும் வர்த்தகக்கண்காட்சி நடத்த தீர்மானித்துள்ளதாக வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சர் ரவி கருணநாயக்கா தெரிவித்துள்ளார்.

சர்வதேசரீதியில் உள்ள வர்த்தக முதலீட்டாளர்கள் தமது பொருட்களை சந்தைப்படுத்தும் நோக்கிலும் சர்வதேசரீதியில் வர்த்தகத் துறையினரிடையே பரஸ்பர ஒற்றுமையினை வளர்க்கின்ற நோக்கிலும் இக்கண்காட்சி அமையுமென்றும்,

இக்கண்காட்சியில் கலந்து கொள்ள பாகிஸ்தான், இந்தியா, பங்களாதேஷ் ஆகிய நாடுகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகவும்,

இதற்காக 85 ஆயிரம் சதுர அடி நிலப்பரப்பு தெரிவுசெய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(உ-10)

## இந்தியாவிலிருந்து இலங்கை திரும்பும்
# அகதிகளிடமிருந்து பணம் பெருமளவில் கொள்ளை

(யாழ்ப்பாணம்)

நாட்டில் நிலவிய அசாதாரண நிலையை அடுத்து இந்தியா சென்று தற்சமயம் படகுகள் மூலம் இலங்கை திரும்பும் அகதிகளிடமிருந்து பெரும் தொகைப்பணம் அறவிடப்படுவதுடன் அநாதரவாக இடை நடுவில் இவ் அகதிகள் விடப்படும் சம்பவங்கள் தற்போது அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தியாவிலிருந்து நெடுந்தீவு நோக்கிப் புறப்பட்ட கணவன், மனைவி உள்ளடங்கிய ஒரு குழுவினர் நெடுந்தீவிலிருந்து சில மைல் தொலைவில் கடலில் நிராதரவாக விடப்பட்டனர்.

இவ் அகதிகளிடமிருந்து 35 ஆயிரம் ரூபா பணமும் பயணக் கட்டணமாக அறவிடப்பட்டதுடன் நகைகள் பலவும் கொள்ளையடிக்கப்பட்டதாக அவ் அகதிகள் சார்பில் புகார் தெரிவிக்கப்பட்டது.

தனியார் ஏஜென்சி மூலம் இப்பயணஒழுங்குமேற்கொள்ளப்பட்டதாகவும் பின்னர் இடைநடுவில்பயணிகள் கைவிடப்பட்ட நிலையில்பிறிதொரு படகில் சென்றவர்கள் உதவி புரிந்தனர் எனவும் இவர்கள் தம்மிடம் இருந்த நகைகளை கொள்ளையடித்ததாகவும் அகதிகள்சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவில் தங்கவைக்கப்பட்ட இவ் அகதிகள் குழுவினரை சொந்த இடத்திற்கு அனுப்புவதற்கான துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் அறியப்படுகிறது.

(க-02)

# இன்று ஒரு தகவல்

## நாவலர் நெடுஞ்செழியன்

தி மு. க வின் பொதுச் செயலாளராக 1956 ல் நாவலர் நெடுஞ்செழியன் தெரிந்தெடுக்கப்பெற்றார். அவரைப் பாராட்டச் சென்னைக் கடற்கரையில் ஒரு விழ வுக்கு ஏற்பாடுசெய்திருந்தார் க ள். அந்த விழாவில் அண்ணா, கலைஞர் கருணாநிதி ஆகியோர் பாராட்டுரை வழங்குவதாகப் பெரியஅளவில் அச்சிடப்பட்ட சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. அதில் 'நெடுஞ்செழியனுக்குப் பாராட்டுவிழா' என்று அச்சிடப்பட்டிருந்த எழுத்துக்கள் சிறியஅளவில்காணப்பட்டன. அதைப் பார்த்துக்கொண்டே கடற்கரைப் பாராட்டுவிழாவுக்குவந்தார் அண்ணா. அவருக்கு என்ன தோன்றியதோ?

பாராட்டுவழங்க அண்ணா மேடையேறியதும் குறிப்பிட்டார். 'நெடுஞ்செழியன் என்ற பெயர் நீளமாகவிருப்பதால்சுவரொட்டிகளில் பெரிய எழுத்துக்களில் அச்சிட இடையூறாக இருக்கிறதுஎன்று எண்ணுகின்றேன், ஆனால் அண்ணா, கருணாநிதி என்பதுபோன்ற பெயர்களுக்கு அப்படிப்பட்ட தொல்லைகள் இல்லை. எனவே, நெடுஞ்செழியன் பெயரைச் சுருக்கி விடலாமென்று பார்க்கிறேன். அவரைஇனி 'நாவலர்' என்று சொன்னால் என்ன? அதுவே, அவருக்குப் பொருத்தமான சுருக்கின பெயராக இன்று முதல் இருக்கட்டும்! சுவரொட்டி அச்சிடுவோருக்கும் அந்தப்பெயர் பெரிய எழுத்துக்களில் அச்சிட உதவியாக இருக்கும்; அன்றுமுதல் நெடுஞ்செழியன் நாவலர் ஆனார். அதற்குப்பிறகு அச்சிடப்பட்ட எத்தனையோ சுவரொட்டிகளில் அவரது பெயர் 'நாவலர்' என்று மட்டும்தான் அச்சிடப்பட்டது.

தம் தப்பிகளிடம் அளவற்ற அன்பும், பக்குவமாகப்பழகும் பண்பும் அண்ணாவுக்கு இருந்ததால்தான், இலட்சக்கணக்கான கழகத் தம்பிகளைப் பெருக்கிக்கொள்ளும் தகுதி தி.மு. கழகத்துக்கு விரைவில் கிட்டியது. திருச்சியில் திராவிட முன்னேற்றக்கழக மாநில மாநாடு நடைபெற்ற பொழுது, சுழகப் புதிய பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பெற்ற நாவலர் நெடுஞ்செழியன்தலைமை தாங்கினார். அவரை அண்ணா தலைமைதாங்குமாறு வழிமொழிந்தார். அப்பொழுது அண்ணா தொடங்கிய வழிமொழிந்தமுறை மிக மிக அற்புதமானது, பெருந்தன்மை மிகுந்தது.

திருச்சிமாநில மாநாட்டில் அண்ணா நெடுஞ்செழியனைப்பார்த்து 'தம்பி வா' தலைமைதாங்க வா! உன் ஆணைக்கு நாங்கள் அனைவரும் அடங்கிநடப்போம் அருமைத்தம்பியே எழுந்து வா! தலைமைஏற்று நடத்த வா! இப்படிச் சுருக்கமாக அண்ணா பேசியதையும், அன்பையெல்லாம் அதில் கொட்டியதையும் அந்த மாநாட்டில் பல்லாயிரம்பேர் கண்டு பிரமித்தார்கள். பண்புச்சிகரமாக அண்ணா அங்கு உயர்ந்து நின்றதைக்கண்டார்கள்.

நவீனன்

# வளைகுடா யுத்தத்தில் பாதிப்புற்ற மேலும் 4,700 பேருக்கு கொடுப்பனவு

### வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

வளைகுடா யுத்தத்தினால் தொழிலை இழந்த மேலும் 4 ஆயிரத்து 700 பேருக்கு நஷ்டஈட்டுக் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தலைவர் சுசந்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இவ் 4ஆயிரத்து 700 பேரின் விண்ணப்பங்களும்ஏற்கனவே கொடுப்பனவுகள வழங்கப்படாது தாமதமாக சமர்ப்பிக்கப்பட்டவையாகும்.

இதற்கான நிதியை ஐக்கிய நாடுகள் சபையிடம் இலங்கை கோரியுள்ளது.

இந்நிதி தாமதமாக கிடைக்கும் பட்சத்தில் அமைச்சரவையின் விசேடஅங்கீகாரத்துடன் விரைவில் இழப்பீட்டுக் கொடுப்பனவுகள் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (உ-3)

### இந்து கலாசார அமைச்சின் கீழ்

## தமிழ்க் கலாசாரம், தமிழ் மொழி அமுலாக்கல்

### கொண்டுவரத் தீர்மானம்

(கொழும்பு)

தமிழ் கலாசாரம் மற்றும் தமிழ் மொழி அமுலாக்கல் ஆகிய இரு விடயங்களும் இந்து சமய கலாசார அமைச்சின் கீழ் சொண்டு வரப்பட வேண்டும் என ஆளும் கட்சி, எதிர்க்கட்சி எம். பிக்கள் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர்.

இத்தீர்மானத்தை பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுக்கு அனுப்பிவைப்பதெனவும் அண்மையில் இடம்பெற்ற இந்து சமய விவகார அமைச்சின் பாராளுமன்ற ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. (உ)

## தெய்வீக இசையரங்கில் இன்று

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் உற்சவ காலத்தை ஒட்டி இளங்கலைஞர் மன்றம் நடத்தும் தெய்வீக இசையரங்கில் பதின் நான்காம் நாளான இன்று 'சின்மய ஆனந்த கீதம்' இசை வேள்வி இடம் பெறவுள்ளது. (க-3)

## சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் உற்சவ காலத்தை ஒட்டி அகில இலங்கை கம்பன் கழகத்தால் நடத்தப்பட்டுவரும் தெய்வீக சொற்பொழிவில் இன்று 'கச்சியப்பர் கண்ட முருகன்' என்ற பொருளில் கு. பாலஷண்முகனின் தெய்வீகச் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது. (க-3)

### செப்ரெம்பர் தொடக்கம் முதல்

## களுத்துறைக் கைதிகள் மீண்டும் உண்ணாவிரதம்

(கொழும்பு)

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி முதல் மீண்டும் சாகும்வரையிலான உண்ணா விரதப்போராட்டத்தை தாம் ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளதாக களுத்துறை தமிழ் அரசியல்கைதிகள் தெரிவித்துள்ளனர்.

தற்போதைய சமாதான சூழலில் நிபந்தனை இன்றி தம்மை விடுவிக்கநடவடிக்கை எடுக்க வேண்டும் என மீண்டும் வலியுறுத்தியுள்ள மேற்படி கைதிகள,

விடுதலை வேண்டி தாம் உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தியபோதுவாக் குறுதி களைவழங்கி போராட்டத்தைக் கைவிடச்செய்த அரசியல்வாதிகளை இனியும் தாம்நம்பப்போவதில்லைஎனவும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, கடந்தமாதம் இவர்கள்விடுதலை வேண்டி உண்ணாவிரதம்மேற்கொண்டபோது, அமைச்சர் பொ. சந்திரசேகரன் மற்றும் ரெலோ முதல்வர் என். ஸ்ரீகாந்தா ஆகியோர் சிறைச்சாலைக்கு நேரில் சென்று அளித்த உறுதி மொழியை நம்பி உண்ணா விரதத்தைக் கைவிட்டமை தெரிந்ததே. (உ)

## தெய்வீக நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

வடபிரதேச இந்துப் பேரவை 63 நாயன்மார் குருபூசை மடத்தில் நடத்தி வரும் நல்லூர் உற்சவகால தெய்வீக நிகழ்ச்சியில் இன்று 'சிவகதிதானே' என்னும பொருளில் சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம் சொற்பொழிவாற்றவுள்ளார். (க-3)

## வியாழனின் உப கோள்கள் 39 ஆக உயர்வு

(கொழும்பு)

வியாழன் கிரகத்தின் உப கோள்களின் எண்ணிக்கை 39 ஆக அதிகரித்துள்ளதாக இலங்கை விண்வெளி ஏவுகணை ஆய்வு நிறுவனம் தகவல் வெளியிட்டுள்ளது.

பிரான்ஸ், கனடா ஆகிய நாட்டு விண்வெளி ஆராய்ச்சியாளர்களின் உதவியுடன் ஹவாய் பல்கலைக்கழகத்தின் விசேட தொலைநோக்கி கருவிமூலம் ஆய்வு நடத்திய போதே வியாழனில் மேலும் 11 உபகோள்கள் கண்டறியப்பட்டுள்ளதாக இலங்கை விஞ்ஞானி அமேல் உடவித்த தெரிவித்துள்ளார்.

இப் 11 உப கோள்களின் விட்டம் 2 கிலோ மீற்றரிலிருந்து 4 கிலோ மீற்றர்வரையான நீளம் உடையதாக காணப்படுகிறது. வியாழனில் முன்னர் கண்டறியப்பட்ட 28 உபகோள்களுக்கும் எதிர்த்திசையிலேயே இப் 11 உப கோள்களும் சுழல்கின்றன. (உ-8)

## இலங்கையில் இருந்து முக்கிய உலோகங்களை ஏற்றுமதி செய்யத் தடை

வெண்கலம், பித்தளை, அலுமினியம் ஆகிய உலோகங்களை வெளிநாடுகளுக்குஏற்றுமதி செய்வதற்கு இலங்கை அரசு தடைவிதித்துள்ளது.

மேற்படி உலோகங்களைக் கொண்டு கைத்தொழில்செய்வோரின் நன்மை கருதியேஇத் தடை விதிக்கப்பட்டுள்ளது. (உ-3)

## இடை நிறுத்தப்பட்ட உலர் உணவு விநியோகம் விரைவில் ஆரம்பிக்கும்

அநுராதபுர மாவட்டத்தின் நச்சியாதீவு, மற்றும் நொச்சியாகம பிரதேசங்களில் தங்கியுள்ள வடமாகாண அகதிகளுக்கு விரைவில் உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்படவுள்ளன.

இப் பிரதேசங்களில் தங்கியுள்ள 120 குடும்பங்களுக்கு கடந்த 20 மாதங்களுக்கு மேலாக உலர் உணவுத் திட்டத்தின் கீழ் உணவு விநியோகிக்கப்படாதது குறித்து வன்னிப் புனர்வாழ்வு அமைச்சர் நூர்டீன் மஞூர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டு வந்தார்.

இதனையடுத்து முதல்கட்டமாக ஏழு மாதங்களுக்கான உலர் உணவுப் பொருட்களும், அடுத்த கட்டமாக எஞ்சிய காலப் பகுதிக்கான நிவாரணப் பொருட்களும் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. (உ ૬-)

## இசைப் பேருரை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உற்சவகாலத்தை ஒட்டி நல்லூர் சைவ மகா சபையின் ஏற்பாட்டில் ஸ்ரீ முத்துவிநாயகர் ஆலய மண்டபத்தில்கானகதாவாரிதிபிரம்ம ஸ்ரீ சிவ. வை. நித்தியானந்தசர்மா நிகழ்த்திவரும் மகா பாரத தொடர் இசைப்பேருரையில் இன்று பி.ப. 6.00 மணிக்கு 'ஏகலைவன்' என்னும்பொருளில் இடம்பெறவுள்ளது. (க-3)

### வட-கிழக்கில்

## புகைப் பிடிப்போர் தொகை திடீர் அதிகரிப்பு

(சுதுமலை)

வடக்கு-கிழக்குப் பகுதிகளில் அண்மைக் காலங்களில் புகைப்பிடிப்பவர்களின் தொகைஅதிகரித்துவருவதாகவும் அதற்குஎதிராகச் செயற்படுமாறும் வடக்கு கிழக்கு மாகாண சுகாதார சேவைப்பணிப்பாளர் டாக்டர் எஸ். குமாரவேல்பிள்ளைவடக்குகிழக்கில் உள்ள சகல சுகாதாரவைத்திய அதிகாரிகளுக்கும் வைத்தியசாலைப் பொறுப்பதிகாரிகளுக்கும் கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

புகைப்பிடிப்பதுபுற்றுநோய் மற்றும் இதயம் சம்பந்தப்பட்ட நோய்கள் ஏற்படுவதற்கு காரணமாகும்.

சுகாதார உத்தியோகத்தர்கள், வைத்திய அதிகாரிகள் கிராம மட்டங்களில் இது தொடர்பாகமக்களிற்கு அடிக்கடிவிழிப்புணர்வைஏற்படுதத வேண்டும்.

பாடசாலைகளிலும் இவ்வாறான நிகழ்வுகளை ஏற்படுத்துவதன் மூலம் புகைத்தலுக்கு அடிமைப்படுவோரின் தொகையைக் குறைக்கலாம் எனஅக்கடிதத்தில்குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-252)

### ஆசிரியையிடம்

## பணம் திருட்டு

(கல்வயல்)

கொடிகாமத்திலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி மினி பஸ்சில் பயணம் செய்த ஆசிரியை ஒருவரிடம் இருந்து 12 ஆயிரம ரூபா ரொக்கப் பணமும் தேசிய அடையாள அட்டை, மற்றும் விசேட அடையாள அட்டை என்பன வெகு இலாவகமாக களவாடப்பட்ட சம்பவம் சிலதினங்களுக்கு முன் இடம் பெற்றுள்ளது.

மீசாலை வடக்கில் தற்காலிகமாக வசித்து வரும் இவர் ஒரு முதன்மை ஆசிரியர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (க-111)

## செஞ்சிலுவைச் சங்கத்தின் இடம்பெயர் சேவையினால் அதிகளவு பெண்கள் பயன்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மற்றும் ஏனைய பகுதிகளில் செஞ்சிலுவைச்சங்கத்தினர்ஆற்றிவரும் இடம்பெயர் மருத்துவசேவையில் கடந்த வருடம் 77ஆயிரத்திற்கும் மேற்பட்ட பெண்கள் பயனடைந்துள்ளனர்.

அத்துடன் இவ்வருட ஆரம்பத்தில்22ஆயிரத்து442பெண்கள் செஞ்சிலுவைச் சங்கத்தில்மருத்துவசிகிச்சையினைப் பெற்றுள்ளதாக செஞ்சிலுவைச் சங்கம் அண்மையில் வெளியிட்டுள்ள அறிக்கை தெரிவித்துள்ளது.

இவ்வருட இறுதிக்குள் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்டோர் இடம்பெயர்சேவையின் மூலம் மருத்துவ சிகிச்சையினைப் பெறுவார்கள் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அவ் அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இச் சேவையில் பெண்களும் சிறுவர்களுமே அதிக நன்மையடைந்து வருவது குறிப்பிடத்தக்கது. (உ-3)

### பண்டிதர் சங்க

## நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

சைவசித்தாந்த பண்டிதர் சங்க நடப்பாண்டு நிர்வாகிகள் தெரிவு அண்மையில் நீராவியடியில் அமைந்துள்ள அதன் அலுவலகத்தில் இடம் பெற்றது.

தலைவராக பிரம்மஸ்ரீ கு. சிவராஜசர்மாவும், உப தலைவர்களாக செ. சிவபாதம், செல்வி அ. மீனலோஜினி ஆகியோரும், செயலாளராக அ. இராஜரட்ணமும், உப செயலாளராக ம. விமலரஞ்சினியும், பொருளாளராக பிரம்மஸ்ரீ தி. சோமாஸ்கந்தராஜக் குருக்களும் தெரிவு செய்யப்பட்டனர். (உ)

# பாகிஸ்தானின் அதி நவீன கப்பல்

# நேற்று முன் தினம் வெள்ளோட்டம்

## கடற்படை உயர் அதிகாரிகளும் சமுகம்

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தான் அதிநவீன வசதிகளுடன் தயாரித்துள்ள நீர்மூழ்கிக் கப்பலை நேற்று முன் தினம் வெள்ளோட்டம் விடப்பட்டது.

பாகிஸ்தான் நகரமான கராச்சி கடற்பரப்பிற்கு அருகே இக் கப்பல் பரீட்சித்து பார்க்கப்பட்டுள்ளது,

இப் பரிசோதனையில் பாகிஸ்தானின் கடற்படை உயர்அதிகாரிகளும், பிரான்ஸ் தூதரக பிரதிநிதிகளும் கலந்து கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந் நீர் மூழ்கிக் கப்பலை தயாரிப்பதற்கு, பாகிஸ்நான் பிரான்ஸ் நாட்டில் இருந்து தொழில்நுட்பவியலாளர்களை அழைத்துக் கொண்டது.

கராச்சி நகரில் அண்மையில் நடைபெற்ற குண்டு வெடிப் பொன்றின் போது பிரான்ஸ் நாட்டின 11 தொழில் நுட்பவியலாளர்கள் கொல்லப்பட்டனர். இச் சம்பவம் நடைபெற்று சுமார் 3 மாத இடைவெளியின் பின்னரே இக் கப்கல் பரீட்சித்து பார்க்கப்பட்டுள்ளது.

1994 ஆம் ஆண்டு காலப் பகுதியில் பாகிஸ்தான்- பிரான்ஸ் நாடுகளுக்கிடையே கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் இரண்டாவது நீர்மூழ்கிக்கப்பலாக இது தயாரிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் அரசு தயாரித்துள்ள இந்நீர்மூழ்கிக்கப்பல் மணித்தியாலம் ஒன்றுக்கு400 கடல்மைல் தூரம் வேகமுடைய துடன், சுமார் 300 மீற்றர் ஆழத்திலும் செல்லக் கூடியது.

பாகிஸ்தான் - இந்தியா ஆகிய இருநாடுகள் இடையே யானபதற்ற சூழ்நிலை அதிகரித்துக் கொண்டுவரும் இவ்வேளையில் பாகிஸ்தானின் இப்பரீட்சார்ந்த நிகழ்வு இந்தியாவுக்கு ஓர் அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளதாக இந்திய பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (க-8)

# போலி நாணயத்தாள்கள் இந்தியாவில் புழக்கம்

(காத்மண்டு)

நேபாளத்திலும் இந்தியப் பிராந்தியங்களிலும் போலி இந்தியா நாணயத்தாள்களை பாகிஸ்தான் பயன்படுத்தி வருகின்றது.

இவ்வாறு காத்மண்டுவில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் இந்தியாவின் மத்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்சிங்க குற்றம் சாட்டியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்; இந்தியாவினுடையபொருளாதாரத்தை சீர்குலைக்கும் நோக்குடனேயே பாகிஸ்தான் இச்சட்ட விரோத செயல்களில் ஈடுபட்டுள்ளதாகவும் கூறினார்.

இவ்வாறான சட்டவிரோத செயல்களுக்கு நேபாள அரசு கடும் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

இதேவேளையில் அண்மையில் நேபாளத்தில் தங்கியிருந்த பாகிஸ்தான் அதிகாரி ஒருவர் போலி நாணயத்துடன் கைது செய்யப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க-10)

### காவல் நிலையம் தகர்ப்பு

(புதுடில்லி)

ஆந்திர மாநில பிரதேசத்தில் ஒரு அரச அலுவலகம் 2 காவல் நிலையங்கள் குண்டு வைத்து தகர்த்தப்பட்டதுடன் 5 காவலர்கள் கடத்திச் செல்லப்பட்டனர்.

ஆந்திர மாநில பிரதேசத்தில் தடை செய்யப்பட்ட மக்கள் யுத்த குழுவினரே இத்தாக்குதலில் ஈடுபட்டுள்ளதாக மாநில அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (க-10)

# பயிற்சியில் ஈடுபட்ட ஹெலியை காணவில்லை தேடும் பணி தொடர்கிறது

(சியோல்

தென்கொரியாவின் மலைப் பகுதியில் இரவுநேரப் பயிற்சியில் ஈடுபட்டிருந்த அமெரிக்க ஹெலிகொப்டர் ஒன்று அண்மையில் காணாமற்போயுள்ளது.

தென்கொரியஇராணுவமும் அமெரிக்கப்படையினரும் விமானத்தை தேடும்பணியில் ஈடுபட்டுவருகின்றனர்.

இக்ஹெலியில் இரு விமானிகள் பயணம் செய்ததாகவும் அவர்கள் குறித்த தகவல்கள் எதுவும் தெரியவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. (க -3)

# இந்திய அமைச்சரவையில் இன்று முக்கிய மாற்றங்கள்

(புதுடில்லி)

இந்திய மத்திய அமைச்சரவையை பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் இன்று மாற்றியமைக்கவுள்ளார்.

மத்திய அமைச்சரவையின் மின்சக்தி அமைச்சர் சுரேஸ் பாபு கடந்த திங்கட்கிழமை தனதுபதவியை இராஜினாமா செய்து கொண்டதைஅடுத்தே இவ்வமைச்சரவை மாற்றியமைக்கப்படவுள்ளது.

இந்திய குடியரசுத் தலைவர் டாக்டர் அப்துல்கலாமின் விருப்புகளுக்கு ஏற்பவே இம் மாற்றங்கள் இடம் பெறவுள்ளதாக மத்திய அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இளைஞர் விவகாரஅமைச்சு திட்டமிடல் இராஜாங்க அமைச்சு போன்ற பல்வேறு அமைச்சுக்களில் மாற்றங்கள் ஏற்படக்கூடும் என எதிர் பார்க்கப்படுகிறது. (க-8)

# சர்வதேச பயங்கரவாத முகாம் ஈராக்கில்

(பக்தாத்)

ஈராக்கின் தென்பகுதியில் சர்வதேசபயங்கரவாதமுகாம் ஒன்றை அமைக்க கடும்போக்குக் கொண்ட முஸ்லிம் பயங்கரவாதக் குழு ஒன்று அல்கொய்டா இயக்கத்திற்கு உதவிஅளித்துள்ளதாக தெரியவருகின்றது.

இம் முஸ்லிம் குழு ஈரான், ஈராக்குடன் தொடர்புடையது என்றும் ஈராக்கின் தென்எல்லையில் அல்கெய்டா இயக்கம் ஆட்சேர்ப்பில் ஈடுபட்டுள்ளதாகவும் இவர்களுக்கு குர்திஸ் பிரதேசங்களில் பயிற்சி வழங்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது: (க-03)


## அமரர் தலைவர்

# அ. அமிர்தலிங்கம் அவர்களின்

# பவள நாள் நினைவு



கண்ணதிலே கருத்துடனே
மக்கள் தொண்டு
மண்ணதிலே அமிர்தத் தலைவா
நீர் புரிந்தீர்
இனிய இறைவனடி சேர்ந்திட்டீர் உம்மாத்மா அஞ்சலிக்காய்
நன்றியுடன் எம் கரமும் நாவும் துதிக்கும்

யாழ்ப்பாணம்
26.8.2002

அமிர்தலிங்கம் நினைவுக் குழு

(5 850)

கேட்டினும் உண்டோர்
உறுதி கிளைஞரை
நீட்டி அளப்பதோர் கோல்
குறள்

வலம்புரி

## இந்தியாவின் ஆதிக்கம்

இலங்கைத் திருநாட்டிற்குள் சிங்கள அரசுகள் தமிழர்களுக்கு உரிமை கொடுக்க மறுத்ததன் விளைவு இருபது வருட யுத்தத்தை தந்தது. வாழ வேண்டிய இளம்வயதினர் மாண்டுபோயினர்.

வெறுமனே இனவெறி, இனிமையானஇந்த நாட்டில்இரத்தஆற்றையே ஓடவைத்தது. இரத்த ஆற்றில் மிதந்தவர்களில் பெரும்பாலானோர் ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்தவர்களென்பதால் அதுபற்றி ஆட்சியாளர்களோ, இராணுவ அதிகாரிகளோ அலட்டிக்கொள்ளவில்லை - உள்ளத்தால் துறவு பூணாத காவிதரித் தகபட தாரிகள் பலர்யுத்தத்திற்காகப் பிரித் ஓதினார்கள், பிரித் ஓதுவது பௌத்தத்தின் வழிபாட்டு முறையாக இருப்பினும் பௌத்தமகாசங்கம் சிங்களவர், தமிழர் எனப் பிரித்துஓதியது இவ்வாறு பிரித்து ஆளும் உபாயம் இனவெறியின் உச்சக்கட்டமாகப் பரிமாணமித்த போது தமிழர்களின் இரத்தத்தைக் குடிக்கும் வெறிகொண்ட காடையர் கூட்டம் 83 ஜூலையில் களமாடியது. 83ஜூலையில் தொட்ட வெறியாட்டம் நீண்டு சென்றமை வேற்று நாட்டு யுத்தத்திலும் காணமுடியாத கொடூரமாகும். இத்தகையதோர் சூழ் நிலையில் இலங்கையின் பொருளாதாரம் படுமோசமாகப் பாதிக்கப்பட்டதை அரசியல் வாதிகள் உணர்ந்திலர். ஆக தமிழனுக்கு இந்நாடு சொந்தமில்லை இது பௌத்த பூமி என்ற மிருகக்குணமே மேலோங்கிக் காணப்பட்டது. இதிலிருந்து இம்மியும் விலக முடியாத பேரினவாதிகள் இலங்கை அன்னிய நாடுகளின் பிடிக்குள் அகப்படும் செய்தியை அறிந்திலர்.

இப்போது நிலைமை முற்றிப் பழுத்து விட்டது ஓர் நாட்டின் குடிமக்கள் மோதிக் கொண்டதன் பயன்அமெரிக்காவின்,இந்தியாவின் ஆதிக்கத்திற்கு ஆளாக வேண்டிய தாயிற்று.

இதன் காரணமாகவே உள்நாட்டு பிரச்சினையைத் தீர்ப்பதற்காக பிரதமரும், அமைச்சர்களும் அடிக்கடி அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் சென்று வருகின்றனர்.

இதில் குறிப்பாக இந்தியாவின் ஆசியில்லாமல் இலங்கையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வே காண முடியாதென்ற நிலை தோன்றி விட்டது.

# தந்தையின் தளபதியாக இருந்த அமிர்தலிங்கம்

# தமிழ்த்தேசியப் போராட்டத்திற்கு வழிவகுத்தார்

தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் செயலாளர் நாயகம் காலஞ்சென்ற அ. அமிர்தலிங்கத்தின் 75வது பிறந்த நாளையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது.

கடந்த நூற்றாண்டு நமது இனத்தின் விடிவிற்காக உழைத்த தலைவர்கள் பலர் வாழ்ந்தகாலம். விடிவிற்கான தீர்வாக இவர்கள் மத்தியில் இரு கருத்தோட்டங்கள் காணப்பட்டன ஒன்று இந்நாடு சுதந்திரம் பெறும் போது தமிழ்மக்கள் இந்நாட்டை ஆட்சி செய்யும் பாராளுமன்றத்தில் தமது இனத்தின் நலனைப் பேணுவதற்கான கூடிய பிரநிதித்துவத்தைப் பெற்றிருத்தல். ஒற்றை ஆட்சி அமைப்பிலேதான் இதற்கான வாய்ப்பு இருந்தது. இத்தகைய ஒற்றையாட்சி அமைப்பில் தமிழ் மக்களின் தனித்தேசியத் தன்மை பேணப்படமாட்டாது என்றும் சமஷ்டி அரசமைப்பில்தான் இது சாத்தியமாகும் என்ற கருத்தோட்டத்தில் செயல்பட்டவர்கள் மற்றைய பிரிவினர். இவ்வமைப்பில் தமிழ் மக்களின் தனித்தேசியத் தன்மை, தாயக உரிமை, சுயநிர்ணய உரிமை பேணப்படும் என்பதும் இவர்களின் சிந்தனையாகும். இத்தகைய சிந்தனையில் கருக்கட்டி ஆல விருட்சமாக வளர்ந்ததுதான் இலங்கைத்தமிழரசுக்கட்சியாகும்.

### இளம் தளபதி

இத்தகைய இயக்கத்தை வளர்த்தெடுப்பதில் தந்தையின் ஒப்பற்றதலைமை, அவர் பெற்றிருந்த பொருளாதார வளம், அவர்செய்த தியாகம், அக்காலச் சூழ்நிலை ஆகியன முக்கிய பங்கினை வகித்தாலும் தந்தையின் தளபதிகளாக இணைந்த பலரின் பங்கு மிகமிகச் சாத்திர ஆக இருந்தது. இவர்கள் தங்கள் சொத்துக்களை, சுகங்களைப் பொருட்படுத்தாது, இவ் விடுதலையான வேள்வித்தீக்கு ஆகுதியானவர்கள். இவர்களில் இளம் அமிர்தலிங்கம் ஒப்பற்றவர்.

1927 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 26 ஆம் திகதி வட்டுக்கோட்டைத் தொகுதியிலுள்ள பண்ணாகத்தில் பிறந்தவர். 1945 இல் இலங்கைப் பல்கலைக்கழகம் புகுந்து பட்டதாரியாகி, பின் சட்டக் கல்லூரியில்பயின்று 1951இல் வழக்கறிஞரானார் மாணவனாக இருக்கும்போதே தமிழ் உணர்வால் உந்தப்பட்டவர். பல்கலைக்கழகத்தில் தமிழ்ச் சங்கத்தை உருவாக்கி அதன் தலைவரானதோடு, சட்டக் கல்லூரியின் தமிழ் மன்றத்தின் சிற்பியாகி அதன் முதல் தலைவரான பெருமைக்கும் உரியவர் இத்தகைய பெருமைக்குரியஇளைஞன் அமிர்தலிங்கம் தமிழரின் உரிமைக்காகப் போராட உதயமான இயக்கத்தில் இணைந்தது வியப்பன்று. இது பற்றி இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வெள்ளிவிழா மலரில் ‘இலட்சியப் பாதை’ என்ற தலைப்பில் அவர் எழுதிய கட்டுரையில் பின்வரும் குறிப்புக் காணப்படுகின்றது.



‘இணையாட்சியின் கீழ் தமிழ் இனத்தின் உரிமையைப் பெறுவதே எமக்குள்ள ஒரே வழி என்று திரு.செல்வநாயகம் அவர்கள் பிரசாரம் செய்யத் தொடங்கினார். இந்த இயக்கத்தின் கால்கோள் விழா 13. 2. 1949 அன்று மாவிட்டபுரம் கந்தசுவாமிகோயில் முன்றலில், ஸ்ரீலஸ்ரீ துரைச்சாமிக் குருக்கள் அவர்கள் ஆசி கூறித் திரு. செல்வநாயகம் அவர்களைத் தலைமை வகிக்கும்படி அழைக்க ஆரம்பமாயிற்று. கோப்பாயப் பிரதிநிதி திரு. கு. வன்னியசிங்கம் அவர்களும் மூதவை உறுப்பினர்டாக்டர் இ. மு. வி. நாகநாதன் அவர்களும்பேசிய இக்கூட்டத்தில்இளைஞர்கள் சார்பில் பேசும் வாய்ப்பு அப்போது ஒரு சட்ட மாணவனாக இருந்த எனக்குக் கிடைத்தது. அன்றிலிருந்து தமிழ் மக்களின் அரசியலில் ஓர் புதிய சிந்தனை-ஈழத்தமிழன் ஓர் தனித் தேசிய இனம். அவனுக்கு ஒரு தனிப் பிரதேசம் உண்டு. அதை அவன் ஆளவேண்டும்; அதன் பொருளாதாரத்தை விருத்திசெய்து தமிழன் வாழமுடியும்; தென்னிலங்கையை நம்பி வாழமுடியாது. வாழத் தேவையுமில்லை; இப்புதுமையான கருத்துக்கள் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் பட்டி தொட்டிகளிலும் பட்டினங்களிலும் எதிரொலிக்கத் தொடங்கின. கருத்துக்குக்கருத்துமாத்திரமல்ல, கல்மாரியும் கிடைத்தது. பல இடங்களில் தமிழ் இனம் செல்ல வேண்டிய பாதை கல்லும் முள்ளும் நிறைந்தது. விஷ ஜந்துக்கள் நெளிவது, இரத்தமும் கண்ணீரும் சிந்த வேண்டியது என்பதை அந்த ஆரம்பக்கட்டத்தில் அனுபவத்திற்கண்டோம் ஆயினும் சளைக்காதுபிரசாரம் வேகமாக நடைபெற்றது...

தந்தையின் தீர்க்கதரிசன மிக்க அரசியல் சிந்தை மக்கள் மத்தியில் வேரூன்றப்பட்ட இன்னல்களை மேற்கூறிய கருத்து தெட்டத் தெளிவாக உணர்த்துகின்றது. மந்திரிப் பதவிகளைப் பெற்று, ஆளும் அரசுக்கு ஆலவட்டம் பிடித்து எப்படியும் சலுகைகளைப் பெற்றுக் காலத்தை ஓட்டலாம் என்று எண்ணியவர்களுக்கு ‘ஒத்துழையாமை’ போராட்டம். ‘ஹர்த்தால்’, ‘கதவடைப்பு’, ‘சத்தியாக்கிரகம்’, ‘சிறைவாசம்’ போன்றசொற்பிரயோகங்கள் அந்நியமாகவே தென்பட்டன. இவைதான் அன்றைய தமிழரின் உரிமைப் போராட்டத்தில் புழக்கத்திலிருந்த சொற் பிரயோகங்களாகும். இதனை உதட்டளவில் மட்டுமன்றிஉள்ளத்தளவிலும்நிலை நிறுத்தி சுதந்திரப் போராட்டத்தை முன்னெடுத்துச் சென்ற மூத்தபரம்பரையுடன் இளைஞனாக இந்தப் பெரிய அஞ்சலோட்டத்தில் இணைந்துஇறுதிவரை சளைக்காது ஓடிக் காலனின் பிடியில் மட்டுமதான் செயலிழந்த மாவீரன் தலைவர் அமிர்தலிங்கம் எனறால் மிகையாகாது.

### போராட்டத்தின் தலைவனாக...

1950 ல் தலைவர் அமிர்தலிங்கம் உருவாக்கிய வாலிப முன்னணி நாளடைவில்வலுப்பெற்ற முன்னணியாக வளர்ச்சி பெற்றதோடு 70 களில் உருவான தமிழ் இளைஞர் பேரவையின் முன்னோடியும் கூட, இப்பேரவைதான் துப்பாக்கிமுனையில்போராட முனைந்து செயல்பட்ட இயக்கங்களுக்கெல்லாம் முன்னோடி: மூத்த பரம்பரையுடன் இளைஞனாக இணைந்து,அம மூத்த பரம்பரையிடமிருந்து தலைமைப் பொறுப்பைத் தமது தியாகத்தால் பெற்று, இளைஞர் பரம்பரையையும் தன்னுடன் இணைத்து அவர்களையும் இயக்கவாதிகளாக ஆக்கிய பெருமைக்குரிய வரும் இவர்தான். தலைவர் அமிர்தலிங்கத்தின்மேடைப்பேச்சே ஒரு தனிரகமானது. இதன் தாக்கத்தை இன்றும் அறியலாம். இவரின் பேச்சு நடையைபின்பற்றி இன்றும் மேடையில் பேசுபவர்கள் பலர் இருக்கின்றார்கள். உண்மையிலே அவரின் மேடைப் பேச்சில் தமிழ் விளையாடியது இவரது சட்டுப்பாடான வாழ்வு, நாவன்மை, அஞ்சாமைஆகியவற்றுடன் இவருடன் இயக்கத்திற்காகவே தம்மை அர்ப்பணித்ததிருமதி மங்கையர்க்கரசியின் உணர்ச்சி மிக்கதமிழ்த்தேசிய கீதங்கள் மக்களைக் குறிப்பாக இளைஞர்களை இச் சுதந்திர இயக்கத்தில்இணைத்து. இது பற்றி 1951இல் திருகோணமலையில் நடைபெற்ற கட்சியின் முதலாவது மகாநாட்டில் தந்தை அவர்கள் தெளிவாகவே பின்வருமாறு எடுத்துக் கூறியுள்ளார்.

‘இவ்வியக்கத்திற்பணிபுரியும் ஊழியர்களாகிய நாம் நம் தலைமுறையிலேயே நமது கோரிக்கை கைகூடுமென்று விசுவாசிக்கின்றோம். எம் தலைமுறையிற் கைகூடாவிடினும்,நாம் இப்போரை நடத்தி எமக்குப் பின்வரும் சந்ததியாரின்கையிற் கொடுப்பது எமதுகடன். எம்பின்னே அரும் பெரும் வீரர்களை எம்மினம் பெறக்கூடும். குறைந்த பட்சத்தில், அவர்களுக்கு அணிவகுப்பவர்களாக வாகினும் இருப்போமாக.

இச்சாத்வீகப் போரில் தந்தையின் தலைமையில் அணிதிரண்டது மட்டுமன்றி தந்தையின் கனவு பொய்க்காதவாறு நாணயத்துடன் தந்தையின் இலட்சியத்தை முன்னெடுத்துச் சென்றதோடு தந்தையின் வாக்கிற்கமைய இளைஞர்களுக்கும் இப்போரின் தாற்பரியத்தை ஊட்டி அவர்களையும் பங்காளிகளாக்கி அவர்கள் இப்பணியைத் தொடர வழிவகுத்த பெருந்தகை தலைவர் அமிர்தலிங்கமே எனலாம். காசி ஆனந்தன், மாவை சேனாதிராசா மட்டுமன்றி இன்றுள்ள போராளிகளின் தலைவர்களும் இவரின் வாரிசுகளே. இதனால் தமிழ்த் தேசிய இனத்தின் போராட்ட வரலாறோடு தலைவர் அமிர்தலிங்கத்தின் வரலாறு பின்னிப் பிணைந்துள்ளது.

இவரைப் பிரித்து இவ்வரலாற்றை, இதன் பின்னணியை,வளர்ச்சியை அணுக முடியாது என்பது துலாம்பரம். தமிழரசுக் கட்சி முன்னின்று நடத்திய போராட்டங்களில் பங்காளிகளாகிச் சளைக்காது பல்வேறுசந்தர்ப்பங்களில் இரத்தஞ்சிந்திய தோடு இவர் அடைந்த இன்னல்களும் பல.கொடுத்த விலைகளும் மிக அதிகம்.

போராட்டங்களால் மட்டுமன்றி தமது அர்ப்பணிப்புகளால் தமிழ்த் தேசியத்திற்கும், தமிழரின் தாயகத்திற்கும் ஒரு நிலையான முழுமையான வடிவம் சொடுத்தவரும் இவரே தான். வட-கிழக்கு மாகாணங்களில் தலைவர் அமிர்தலிங்கத்தின் கால் படாத இடமேயில்லை. இவர் சந்திக்காத மக்களே இல்லை. தெரியாத கிராமங்களே இல்லை; தமிழரின் போராட்டத்தில் தமிழால் ஒன்

பேராசிரியர்
**சி. க. சிற்றம்பலம்**
பீடாதிபதி பட்டப்பின் படிப்புகள் பீடம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

3-ம் பக்கம் பார்க்க

## தினசரி தியானம்

## இறப்பில்லா மனிதன்

உங்களது பண்பாட்டின் மேல் உள்ள பற்று அல்லது நம்பிக்கையாலும்,இறைவனை உணர்வதற்கான வாழ்க்கையாலும்,உங்கள் நாட்டுக்கும்தனிப்பெருங்கருணைத் தலைவரான இறைவனுக்கும்,மக்களுக்கும்,உங்களுக்குமாக நீங்கள் நன்கு பணியாற்றலாம். ஒரு நாட்டின் கௌரவம் இப்படி தங்களைப் பண்படுத்திக் கொண்ட புதல்வர்களையும், புதல்விகளையும் சார்ந்திருக்கிறது காலம் அழிந்து கொண்டேயிருப்பினும்,இறையடியார்கள் தாம்,எப்போதும் நினைவில் இருப்பவர்கள் இவர்களே இறப்பில்லா மனிதர்களாக அதாவது ஜீவன் முத்தர்களாகப் பிரகாசிப்பார்கள்.

சுவாமி சிவானந்தர்

# நேர்முகப் பரீட்சைக்கு இளைஞர்கள் படையெடுப்பு

(கல்வயல்)

அரச மற்றும் தனியார் துறையினர், கூட்டுறவுத் துறையினர் நடத்தும் நேர்முகப்பரீட்சைக்கு பெருமளவு இளைஞர்கள் படைஎடுப்பதால் நேர்முகப்பரீட்சையை நடத்துவது பெரும் சிரமமாக உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சிலிங்கோ காப்புறுதி நிறுவனம், சர்வோதயம், ஜனசக்தி காப்புறுதிநிறுவனம் போன்ற நிறுவனங்கள் அண்மையில் நடத்திய நேர்முகப் பரீட்சைகளின்போதே பெருமளவு இளைஞர்கள் படையெடுத்ததாக தெரிவிக்கப்படுகிறது.

நாட்டில்நிலவும் வேலையின்மைப் பிரச்சினையே இதற்குப் பிரதான காரணம் என்று மேலும் தெரிவிக்கப்படுகிறது. (க-111)

# பொலித்தீன் பாவனையை நிறுத்துமாறு அறிவிப்பு

## கொழும்பில் அமுல்படுத்த முடிவு

(கொழும்பு)

கொழும்பு மாவட்டத்தில் பொலித்தீன் பாவனையை நிறுத்துமாறு கொழும்பு மாவட்டத்தில் சூழல் பாதுகாப்பு அமுலாக்கல்பிரிவு அறிவித்துள்ளது.

அதிகரித்த பொலித்தீன் பாவனையாலும் அவற்றை கண்டபடிவீசி எறிவதாலும் கொழும்பு மாநகரம்உட்பட, மாவட்டத்தின்பல பகுதிகளிலும் ஏற்படும் சூழல்பாதிப்பை கருத்தில்கொண்டே இவ் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

சூழலைப் பாதிக்கும் பொலித்தீன் பாவனையை கட்டுப்படுத்த சகல அரசியல் கட்சிகளும், அரசியல்வாதிகளும் ஒத்துழைக்க வேண்டும் என்று மாவட்ட சூழல்சட்ட அமுலாக்கல் கமிட்டியின் உப தலைவி திருமதி கலாநிதி அஜந்தா பெரேரா கேட்டுள்ளார். (க-3)

# சாதகமான பதில் கிடைக்காவிடின் யாழ். செயலகம் முன்மறியல்போர்

## காணாமல் போனோர் பாதுகாவலர் சங்கம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

காணாமல் போனோர் தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுடன் இம் மாத இறுதியில் அல்லது அடுத்த மாத முற்பகுதியில் நடாத்தவிருக்கும் பேச்சு வார்த்தைக்கு சாதகமான பதில் கிடைக்காதவிடத்து யாழ். செயலகம் முன்னால் மறியல்போரில் ஈடுபடுவதைத் தவிர வேறுவழியில்லை.

காணாமல் போனோர் சங்கத்தலைவர் ப. செல்வராஜா தலைமையில் யாழ்ப்பாணம் முனியப்பர் கோயில் முன்றலில் நேற்றுக்காலை நடைபெற்ற கூட்டத்தில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

அக்கூட்டத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது,

கடந்த 12ந் திகதி காணாமல் போனோர் சங்கம் யாழ் செயலகம் முன்னால் நடாத்திய மறியல் போராட்டத்தை அடுத்து மேற்படி சங்க உறுப்பினர்கள் தென்பகுதி சிறைச்சாலைகளுக்கு சென்று தடுத்து வைக்கப்பட்டோரை பார்வையிடுவதற்கும்பிரதமருடனான சந்திப்பிற்கும் ஏற்பாடு செய்வதாக உறுதிமொழி வழங்கப்பட்டது.

இதனை அடுத்து காணாமல் போனோர் சங்கப் பிரதிநிதிகளுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவிற்கும் இடையில் சந்திப்பு ஏற்படுத்தப்பட்டது.

தென்பகுதிச் சிறைச்சாலைகளுக்கு சென்றுபார்வையிட்ட பின்னர் தம்மைச்சந்திக்குமாறு பிரதமர் கேட்டுக்கொண்டதற்கிணங்க மேற்படி குழுவினர் சிறைச்சாலைகளுக்குச் சென்று பார்வையிட்டனர். அங்கு சம்பந்தப்பட்ட எவரும் காணப்படாததையடுத்து ஏமாற்றத்துடன் திரும்பியுள்ளனர்.

பொது ஜனஐக்கிய முன்னணி ஆட்சிக்காலத்தின் போது செயற்பட்ட புனர்வாழ்வு அமைச்சு, நான் அமைப்பு, பாதுகாப்பு அமைச்சு ஆகியன இணைந்து 167 பேர் வன்செயல்களால் கொல்லப்பட்டதாக அறிக்கை சமர்ப்பித்துள்ளனர். எஞ்சியவர்கள் நிலைப்பாடு என்ன என்பது குறித்தும் கூட்டத்தில்வினாதொடுக்கப்பட்டது. (க- 02)

# தேர்தலை தவிர்க்க ஒரே வழி யாப்பு திருத்தத்தை ஏற்பது

## பௌசி எம். பி. தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் தற்போதை சூழ்நிலையில் தேர்தல் ஒன்று இடம்பெறுவதை தவிர்க்க ஒரேவழி ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் கொண்டுவரவுள்ள 18ஆவது அரசியல் திருத்தத்தை ஆதரிப்பதே ஆகும்.

இவ்வாறு பொதுஜன ஐக்கிய முன்னணியின் கொழும்பு மாவட்ட எம்.பி ஏ.எச்.எம் பௌசி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் அடிக்கடி தேர்தல் இடம்பெறுவது பொருளாதாரத்தை மோசமாகப் பாதிக்கச் செய்யும். இந்நிலையில் அதைத் தவிர்க்க 18 ஆவது அரசியல் திருத்தத்தை ஆதரித்து பிரச்சினைக்கு முடிவு கட்டுவது சிறந்த வழி என்று கூறினார். (இ)

# வைத்தியரின்றி செயற்படும் நெடுந்தீவு அரசினர் ஆஸ்பத்திரி அவதி நிலையில் நோயாளர்

(நெடுந்தீவு)

நெடுந்தீவில் இயங்கிவரும் ஆஸ்பத்திரி கடந்த இருவாரங்களுக்கும் மேலாக வைத்தியர் இன்றி செயற்படுவதால் நோயாளர் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

ஒரு ஆண் நோயாளர்விடுதி, ஒரு பெண்நோயாளர்விடுதி, ஒரு பிரசவ விடுதி, ஒரு பற்சிகிச்சை நிலையம் ஆகியவற்றைக்கொண்டதாக இவ் வைத்தியசாலை காணப்படுவதும் 20-25 படுக்கை வசதிகள் உள்ளதும் குறிப்பிடத்தக்கது.

ஒரு எம்.பி.பி.எஸ்; தர வைத்தியரும், இரண்டு ஆர்.எம்.ஒ தர வைத்தியரும் கடமைபுரிய வேண்டியஇடத்தில் ஒரு ஆர்.எம்.ஒ. தர வைத்தியர்மட்டும் கடமை புரிகின்றார்.

அவரும்கூட தமது வயோதிபம் காரணமாக சங்கானையில் கடமைஆற்றுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க-250)


## பிறந்தநாள் வாழ்த்து

திரு. திருமதி கிருஸ்ணதாஸ் தம்பதிகளின் புதல்வி கயந்தினி அவர்கள் தனது 5 வது பிறந்த தினத்தை இன்று தனது இல்லத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடுகிறார். அவரை அப்பா, அம்மா, சகோதரர்கள், சகோதரிகள், உற்றார், உறவினர், நண்பர்கள் நீடுழி வாழ்கவெனவாழ்த்துகிறார்கள்.

இல. 14, சங்கிலியன் வீதி, நல்லூர்

(C-4846)


# திருநாள் திருப்பலி

(கொய்யாத்தோட்டம்)

கொய்யாத்தோட்டம்புனித ஆரோக்கியநாதர் ஆலயத் திருநாள் திருப்பலி நாளைக் காலை 7 மணிக்கு இடம்பெறவுள்ளது,

இன்று மாலை 5.30 மணிக்கு நற்கருணை வழிபாடுஇடம்பெறும். (த-22)

# அரசு-புலிகள் சமாதானப்பேச்சு அமெ.,இந்தியாஉன்னிப்பாககவனிப்பு

(கொழும்பு)

இலங்கை அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் அடுத்த மாதம் தாய்லாந்தில் நடைபெறவுள்ள நேரடிப் பேச்சுவார்த்தையை இந்தியாவும் அமெரிக்காவும் மிகவும் உன்னிப்பாக அவதானிக்குமென்ற தகவல் வெளியாகியுள்ளது

இலங்கையின் நீண்டகால இனயுத்தத்திற்கு முடிவு கட்டும் வகையில் நடைபெறவுள்ள இப்பேச்சு வார்த்தைகள் மற்றும் பேசப்படவுள்ள விடயங்கள் தொடர்பான விபரங்களை அறிந்துகொள்வதிலும் முன்வைக்கப்படவுள்ளதீர்வு திட்டம் பற்றிய முடிவுகளை தெரிந்து கொள்வதிலும் இருநாடுகளும் முனைப்புக் காட்டி வருகின்றன.

இலங்கையில் சமாதானம் ஏற்படுவதையே தாம் விரும்புவதாக தெரிவித்துள்ள இரு நாடுகளும் ஐக்கிய இலங்கைக் கோட்பாட்டுக்குள் தீர்வு அமைய வேண்டும் என்பதையும் வெளிப்படுத்தி தமது கருத்தையும் தெரியப்படுத்தியுள்ளன.

தென்னாசியப் பிராந்தியத்தில் தமது செல்வாக்குக்கு பாதகம் ஏற்படாத வகையில் பிரச்சினைக்கான தீர்வு அமைய வேண்டும் என்பதில் குறியாகவுள்ள இரு நாடுகளும் அதனை உறுதிப்படுத்த இப்பேச்சுவார்த்தையை உன்னிப்பாக கவனிக்க முற்பட்டுள்ளன.

இதேவேளை இலங்கை அரசின் பலம் பலவீனம்பற்றித் தெரிந்து வைத்திருக்கும் இந்தியாவும் அமெரிக்காவும் புலிகளின்பலத்தில் சமதுளணம்பிழைத்து விடக்கூடாது என்பதற்காக புலிகளோடு தொடர்புபடும் இப்பேச்சு விடயத்தை கூர்மையாக அலச முற்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது (ெ)

## கொள்ளையர்

கதவைத்திறக்கும்படி பயமுறுத்தினர்.

பிரஸ்தாப வீட்டுக்காரர் கதவை உட்புறமாக தாழிட்டு திறக்கமறுத்தனர்;

மீண்டும்மீண்டும் துப்பாக்கி குழுவினர் மிரட்டியதால் வீட்டினுள் இருந்தோர் அபயக்குரல் எழுப்பினர்.

இதனால் அயலவர்கள் வீட்டுக்குள் ஓடிவந்ததும் துப்பாக்கிக்குழுவினர் சரமாரியாகச் சுட்டுவிட்டுத் தப்பிச்சென்றுள்ளனர்;

இத்துப்பாக்கிச்சூட்டுச்சம்பவத்தினால் அப்பகுதியெங்கும் பெரும்பரபரப்பு ஏற்பட்டது.

இதேவேளை சம்பவத்தைக் கேள்வியுற்று யாழ்பொலிசார் பிரஸ்தாபவீட்டுக்கு இரவு11மணியளவில்விரைந்து வந்து விசாரணைகளை மேற்கொண்டனர். (த-243)

## புலிகள்

பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வதற்கு வழி ஏற்பட்டுள்ளதுஎன்றும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

1998 ம் ஆண்டு பௌத்தர்களின் புனிதத்தலமான தலதா மாளிகை மீது இடம்பெற்ற குண்டுத் தாக்குதல்களை அடுத்து விடுதலைப் புலிகள் அமைப்பின் மீது தடை விதிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே. (த)

## சட்டமூலம்

முன்னணித் தலைவர்கள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர்.

18 ஆவது அரசியலமைப்பு திருத்தம் நடைமுறைக்கு வரவேண்டும் என்றால் அரசாங்கம் சர்வஜன வாக்கெடுப்பொன்றை நடத்தியே ஆக வேண்டும்;

ஆனால் சர்வஜனவாக்கெடுப்பை நடத்த ஜனாதிபதியே அங்கீகாரம் வழங்க வேண்டும்.

ஏனெனில் அதற்கான உத்தரவை வழங்கும் அதிகாரம் ஜனாதிபதியிடமே உள்ளதென்றும்,

ஜனாதிபதியின் ஒத்துழைப்பு இல்லாமல் அதனை மேற்கொள்ள முடியாதென்றும் பொதுஜன ஐக்கிய முன்னணித் தலைவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (இ)

## முஸ்லிம்

தைக் கோரியுள்ளார்.

முஸ்லிம் மக்களின் உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பதற்காக தேசிய ஐக்கிய முன்னணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசுடன் இணைந்து செயற்படுவது தொடர்பாக இருதரப்பினருக்கும் இடையில் பேச்சுக்கள் இடம் பெறுகிறதென்று தெரிவித்த பேரியல் மேலும் கூறுகையில்,

முஸ்லிம் மக்களுக்கான தனியான அலகைப் பெற்றுக்கொடுக்க ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முன்வந்தால் அதற்கு தேசிய ஐக்கிய முன்னணி ஆதரவு வழங்குமென்றும் கூறினார்.

இதேவேளை ஐக்கியதேசிய முன்னணி கொண்டுவர இருக்கும் ஜனாதிபதியின் அதிகாரக்குறைப்புக்கு ஆதரவு வழங்கப்போவதில்லை என்றும், ஆனால் யாப்பு மாற்றத்துக்கு முழுமையான ஆதரவு வழங்குவேன் என்றும் பேரியல் அஸ்ரப் தெரிவித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது (ெ)


## ஆட்கள் தேவை

பிடவை வியாபாரத்தில் அனுபவமிக்க விற்பனையாளர்கள் மட்டும் தேவை.

த. குமாரசாமி ரெக்ஸ் ரைஸ்ஸ்
44, 42 பெரிய கடை வீதி,
யாழ்ப்பாணம்

நேரில் வரவும், திங்கட் கிழமை காலை 10.00 மணிக்கு மேல்.

(5849)

## கணிதம் விஞ்ஞானம் பிரத்தியேக வகுப்பு

ஆசிரியர் R. கலைச்செல்வன் (பருத்தித்துறை)

தொடர்பு:-

நிர்வாகி
வாணி கல்வி நிலையம்,
தும்பளை.

நிர்வாகி
சயன்ஸ் அக்கடமி,
நெல்லியடி.

(5840)


இப் பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தினரால் இல, 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம என்னும் விலாசத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 26-08-2002 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.